## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوا اسۡتَجِيۡبُوۡا لِلّٰهِ وَلِلرَّسُوۡلِ اِذَا دَعَاكُمۡ لِمَا يُحۡيِيۡكُمۡ

நம்பிக்கை கொண்டவர்களே! (அல்லாஹ்வின் தூதராகிய) அவர் உங்களுக்கு உயிர் கொடுப்பதற்காக அழைத்தால் நீங்கள் அல்லாஹ்வுக்கும், தூதருக்கும் பதில் அளியுங்கள். அல்லாஹ் மனிதனுக்கும் அவனுடைய உள்ளத்திற்குமிடையில் சூழ்ந்திருக்கின்றான் என்பதையும் நீங்கள் (உயிர்பிக்கப்பட்டு) அவனிடமே திரும்பவும் கொண்டு செல்லப்படுவீர்கள் என்பதனையும் தெரிந்து கொள்ளுங்கள்.

(அல் அன்ஃபால்: 25)

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ نَحۡمَدُهٗ وَنُصَلِّيۡ عَلٰى رَسُوۡلِهِ الۡكَرِيۡمِ وَعَلٰى عَبۡدِهِ الۡمَسِيۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

தொகுதி 9

இதழ் 1 - 3

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1445 ஜமாதிஸ் ஸானீ 21-05ரஜப்★ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - ஸுல்ஹ் 04- 18

★ 04 - 18 ஜனவரி 2024


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**ஒருவர் இரட்சிப்பை விரும்புகின்றார் மேலும் தூய வாழ்வை அல்லது நிரந்தர வாழ்வை தேடக் கூடியவராக இருக்கின்றார் என்றால் அவர் அல்லாஹ்விற்காக தனது வாழ்வை அர்ப்பணம் செய்யட்டும். மேலும் இந்த அந்தஸ்தையும், படித்தரத்தையும் பெற வேண்டும் என்ற முயற்சியிலும், சிந்தனையிலும் ஒவ்வொருவரும் ஈடுபட்டு விட வேண்டும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

நான் இந்த வழியில் முழுமையான அனுபவம் கொண்டவன் ஆவேன். மேலும் அல்லாஹ்வின் அருளினால் நான் அந்த இன்பத்தையும், ஆனந்தத்தையும் சுவைத்திருக்கின்றேன். ஒருவேளை நான் மரணித்து மீண்டும் உயிர்பெற்றுவிட்டால் மேலும் மீண்டும் மரணித்து மீண்டும் உயிர் பெற்றுவிட்டாலும் கூட அல்லாஹ்வின் வழியில் வாழ்வை அர்ப்பணிப்பதற்கான எனது ஆர்வம் நான் ஒவ்வொரு முறையும் ஆனந்தத்துடன் அதிகரித்துக் கொண்டே செல்ல வேண்டும் என்றே நான் விருப்பம் கொள்கின்றேன்.

எனவே நான் இந்த வழியில் சுயமே அனுபவம் படைத்திருக்கின்றேன். மேலும், அனுபவித்து இருக்கின்றேன். மேலும், இந்த அர்ப்பணித்தலுக்காக அல்லாஹ் எனக்கு எப்படிப்பட்ட உத்வேகத்தை வழங்கியிருக்கின்றான் என்றால், இந்த அர்ப்பணித்தலில் எந்த நற்கூலியும், பயனும் இல்லை ;மாறாக வேதனையும், துன்பமும் இருக்கும் என்று கூட என்னிடம் கூறப்பட்டால் அப்போதும் இஸ்லாத்திற்கு தொண்டாற்றுவதிலிருந்து என்னால் விலக முடியாது. எனவே எனது ஜமாஅத்திற்கு அறிவுரை கூறுவதையும், இந்த விஷயத்தை எட்ட வைப்பதையும் நான் எனது கடமையாக கருதுகின்றேன். இனி ஒவ்வொருவருக்கும் இதற்கான அதிகாரம் உள்ளது. அதாவது அவர் (விரும்பினால்) இதை கேட்கட்டும்; அல்லது கேட்காமல் இருக்கட்டும்! ஒருவர் இரட்சிப்பை விரும்புகின்றார் மேலும் தூய வாழ்வை அல்லது நிரந்தர வாழ்வை தேடக் கூடியவராக இருக்கின்றார் என்றால் பின்னர் அவர் அல்லாஹ்விற்காக தமது வாழ்வை அர்ப்பணம் செய்யட்டும்! மேலும் எனது வாழ்வும், மரணமும், எனது தியாகங்களும், எனது தொழுகைகளும் அல்லாஹ்விற்கே உரியன என்று கூறக் கூடிய அளவில் அந்த அந்தஸ்தையும், படித்தரத்தையும் பெற வேண்டும் என்ற முயற்சியிலும், சிந்தனையிலும் ஒவ்வொருவரும் ஈடுபட்டு விட வேண்டும். மேலும், ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களைப் போன்று அவரது ஆன்மா எல்லா உலகங்களுக்கும் இறைவனுக்குக் கட்டுப்பட்டவனாயுள்ளேன் (அல்பகரா: 132)என்று கூறிவிட வேண்டும். மனிதன் இறைவனிடத்தில் மாய்த்துக் கொள்ளாத வரை, இறைவனின் வழியில் மரணித்து விடாத வரை அவனால்

**இதன் தொடர்ச்சி : 16ம் பக்கம்...**

**இந்த வசனத்திற்கான பொருளை மறுமையுடன் மட்டுமே பொருத்திப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, கடுமையான போர்கள் அல்லது நிலநடுக்கங்களிலும் இந்த நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது**

**1905-ல் காங்கடா மாவட்டத்தில் நிலநடுக்கம் வந்தபோது அதனால் சுமார் 30 ஆயிரம் நபர்கள் மாண்டுபோயினர். முழு கிராமமும் எப்படி அழிந்து விட்டன என்றால் அவற்றின் பெயரும், அடையாளமும் கூட எஞ்சியிருக்கவில்லை. பஞ்சாப் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலை வரை அதிர்ந்து விட்டது. ஆக அப்போதைய மக்களின் நிலையும் முற்றிலும் இவ்வாறே இருந்தது**

يٰۤاَيُّهَا النَّاسُ اتَّقُوۡا رَبَّكُمۡ‌ۚ اِنَّ زَلۡزَلَةَ السَّاعَةِ شَىۡءٌ عَظِيۡمٌ ۝ يَوۡمَ تَرَوۡنَهَا تَذۡهَلُ كُلُّ مُرۡضِعَةٍ عَمَّاۤ اَرۡضَعَتۡ وَتَضَعُ كُلُّ ذَاتِ حَمۡلٍ حَمۡلَهَا وَتَرَى النَّاسَ سُكٰرٰى وَمَا هُمۡ بِسُكٰرٰى وَلٰـكِنَّ عَذَابَ اللّٰهِ شَدِيۡدٌ ۝

பொருள்: மக்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள். ஏனெனில், (தீர்ப்பு வழங்கும்) அந்த நேரத்தின் பேரதிர்ச்சி மிகவும் பயங்கரமானதாகும். நீர் அதனைக் காணும் நாளில் பாலூட்டும் ஒவ்வொரு தாயும் தான் கொடுக்கும் குழந்தையை மறந்து விடுவாள். கருவுற்ற ஒவ்வொரு பெண்ணும் தன் சுமையைக் களைந்து விடுவாள். நீர் மக்களைக் குடி மயக்கத்தில் இருப்பவர்களைப் போன்று காண்பீர். ஆனால், அவர்களோ குடி மயக்கத்தைக் கொண்டவர்களல்ல. ஆயினும், அல்லாஹ்வின் தண்டனை மிகக் கடினமானது. (22:2,3)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல்கஹ்ஃப் மற்றும் குகைவாசிகளைக் குறித்து விளக்கவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

இந்த வசனத்தைக் குறித்து இந்த விஷயத்தை

**இதன் தொடர்ச்சி : 16ம் பக்கம்...**

## நபிமொழி

**அல்லாஹ்வின் வரம்புகளுக்குள் நிற்கக் கூடிய நபர்**

(2493) ஹஸ்ரத் நுஃமான் பின் பஷீர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் வரம்புகளுக்குள் நிலை பெற்றிருக்கின்ற நபர் மற்றும் வரம்புகளை மீறிய நபருக்குமான உவமை என்பது சீட்டுக் குலுக்கிப் போட்டு கப்பலில் இடத்தை பிரித்துக் கொண்ட மக்களின் உவமை ஆகும். அதாவது அந்த மக்கள் கப்பலில்(தங்களுக்கு இடம் பிடிப்பதற்காகச்) சீட்டுக் குலுக்கிப் போட்டனர். (அதன்படி) அவர்களில் சிலருக்குக் கப்பலின் மேல் தளத்திலும், சிலருக்கு கீழ்த் தளத்திலும் இடம் கிடைத்தது. கீழ்த் தளத்தில் இருந்தவர்களுக்குத் தண்ணீர் தேவைப்பட்டபோது (அதைக் கொண்டு வர) அவர்கள் மேல் தளத்தில் இருப்பவர்களைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. அப்போது, கீழ்த் தளத்தில் இருந்தவர்கள் (தமக்குள்) நாம் (தண்ணீருக்காக) நம்முடைய பங்கில் (கீழ்த் தளத்தில்) ஓட்டையிட்டுக் கொள்வோம்; மேலே இருப்பவர்களைத் தொந்தரவு செய்யாமலிருப்போம். (அது சிறந்ததாக இருக்கும்) என்று பேசிக் கொண்டார்கள். தற்போது. அவர்கள் விரும்பியபடி செய்து கொள்ள அவர்களை மேல் தளத்தில் உள்ளவர்கள் விட்டு விட்டால் (கப்பலில் இருப்பவர்கள்) அனைவருமே அழிந்து போவார்கள். (ஓட்டையிட விடாமல்) அவர்களின் கரத்தைப் பிடித்துக் கொள்வார்களாயின் அவர்களும் தப்பித்துக் கொள்வார்கள். (அவர்களுடன் மற்ற) அனைவரும் தப்பித்து விடுவார்கள்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 4, கிதாபுஷ் ஷிர்கா, காதியான் பதிப்பு.2008-ம் ஆண்டு)

* * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஃபராத் பின் ஹயான் இஸ்லாத்தை தழுவிய சம்பவத்தின் விளக்கம் & கஅப் பின் அஷ்ரப் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் விளக்கம் & அதிலுள்ள நுட்பமான ஞானம் மேலும் அதில் எழுகின்ற ஆட்சேபனைகளுக்கான பதில்கள் மற்றும் பாலஸ்தீனத்தின் அநீதியிழைக்கப்பட்ட மக்களுக்காக துஆவிற்கான அறிவுரை**

ஹிஜ்ரத்திற்கு பிறகு முஸ்லிம்கள் மற்றும் யூதர்களுக்கிடையில் நிகழ்ந்த உடன்படிக்கையின் படி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஒரு சாதாரண குடிமகன் என்ற அந்தஸ்து இருக்கவில்லை. மாறாக, அன்னார் (ஸல்) மதீனாவில் நிலை பெற்றிருந்த அந்தக் குடியரசு அரசாங்கத்தின் தலைவராக இருந்தார்கள். மேலும், அனைத்து விதமான சண்டைகள் மற்றும் அரசியல் விவகாரங்களில் எது சரியானதோ? அதற்கான கட்டளையை பிறப்பிப்பதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனவே நாட்டின் பொது அமைதியை கருத்தில் கொண்டு கஅபின் குழப்ப செயல்களை கருத்தில் கொண்டு அவன் கொலை செய்யப்படுவதற்கு தகுதியானவன் என்ற தீர்ப்பை அன்னார் (ஸல்) வழங்கினால் அது ஓர் ஆட்சேபனைக்குரிய விஷயமாக இருக்க முடியாது

தற்போது உலகம் தனது அழிவை மிகவும் நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்று தோன்றுகின்றது. இந்த அழிவிற்கு பிறகு எந்த மக்கள் பாதுகாப்பாக இருப்பார்களோ அவர்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக. அவர்கள் இறைவனின் பக்கம் கவனம் செலுத்துவார்களாக. அவன் பக்கம் திரும்புவார்களாக. எவ்வாறு இருப்பினும் நாம் இது தொடர்பாக அதிகமாக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் உலகின் மீது கருணை புரிவானாக!

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கூட நன்றாக பேசுகின்றார். இன்றைய நாட்களில் சிறப்பாக பேசுகின்றார். ஆனால் அவரது பேச்சிற்கு எந்த முக்கியத்துவமும் இல்லை என்றே தோன்றுகின்றது. இந்தப் போருக்கு பிறகு அல்லது இனியும் பரவிவிட்டால் இது மேலும் பரவிவிட்டால் அல்லது உலகப் போர் போன்ற ஒரு சூழலை உருவாகிவிட்டால் அதன் பிறகு ஐக்கிய நாடுகள் சபையின் நிலையும் முடிவுக்கு வந்து விடும் என்றும் தோன்றுகின்றது. அல்லாஹ் உலகிற்கு அறிவை வழங்குவானாக.

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 17 நவம்பர் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **17ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

கடந்த குத்பாவின் இறுதியில் எடுத்துரைக்கப்பட்டுக் கொண்டிருந்த (இஸ்லாமிய) வரலாறு அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அந்த இடத்தில் ஃபராத் பின் ஹயான் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட சம்பவத்தைப் பற்றியும் கூறப்பட்டிருந்தது. அவர் இஸ்லாத்தை தழுவியது குறித்து கூடுலாக இந்த விளக்கம் இவ்வாறு உள்ளது: அதாவது, கடந்த குத்பாவில் கூறப்பட்டிருந்தது போன்று இவர் கைது செய்யப்பட்டு கைதிகளுடன் இருந்தார். பத்ர் போர் நாளன்றும் இவர் காயமுற்றிருந்தார். எனினும் எப்படியோ பிடியிலிருந்து தப்பிச் செல்வதில் அவர் வெற்றிக் கண்டு விட்டார். பின்னர் அவர் முஸ்லிம்களின் கரங்களால் கைது செய்யப்பட்டிருந்தார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவரைக் கண்டதுமே, இப்போது கூட நீர் உமது செயல்முறையை மாற்றிக் கொள்ள மாட்டீரா? என்று கேட்டார்கள். அப்போது, இந்த முறை நான் முஹம்மது (ஸல்) அவர்களிடமிருந்து தப்பிச் சென்றுவிட்டால் பின்னர் நான் (முஸ்லிம்களின்) பிடியில் வர மாட்டேன் என்று ஃபராத் கூறினார். அப்படியென்றால் நீர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விடு! என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

நீர் தப்பிக்கவே விரும்புகின்றீர் என்றால் பின்னர் நீர் இஸ்லாத்தை ஒப்புக் கொள்வீராக! அந்த ஒரு வழி மட்டுமே உள்ளது.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இந்தக் கூற்றை கேட்டு விட்டு, ஃபராத் பின் ஹயான் இறைத் தூதர் (ஸல்) அவர்களை நோக்கிச் சென்றார். தனது ஓர் அன்ஸாரி நண்பரிடம் இருந்து கடந்து சென்றவாறு, நான் முஸ்லிம் ஆவேன் என்று கூறத் தொடங்கினார். அந்த அன்ஸாரி ஸஹாபி ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, அவர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார் என்று கூறினார்கள். அவரது விவகாரத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் ஒப்படைத்தவாறு,

إِنَّ مِنْكُمْ رِجَالًا نَكِلُهُمْ إِلٰى إِيْمَانِهِمْ

என்று கூறினார்கள். அதாவது, நிச்சயமாக உங்களில் சில மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றால் நாம் அவர்களை அவர்களின் ஈமானிய நிலையில் ஒப்படைத்து விடுகின்றோம். நான் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டேன் என்று இவர் கூறுகின்றார் என்றால் சரி; அப்படியே ஆகட்டும்! இனி அவருக்கும் அல்லாஹ்விற்குமான விவகாரம் ஆகும்.

எவ்வாறு இருப்பினும், இந்த விஷயத்தின் அடிப்படையில் அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விடுதலை செய்து விட்டார்கள். (தாயிரா மஆருஃப் ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், தொகுதி 6, பக்கம் 398, மக்தபா தாருல் மஆருஃப்,லாஹூர்)

விளக்கத்தில் இந்த ஒரு விஷயமும் இருக்கின்றது. அதாவது,ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களுடைய ஒரு போர்க் குழு ஜமாதில் ஆகிர் மாதம், ஹிஜ்ரி 3-ம் வருடம் கரதஃ என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டது.

ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அதாவது பனூ ஸுலைம் மற்றும் பனூ ஃகத்ஃபான் கோத்திரங்களின் தாக்குதலுக்கு பிறகு சிறிது ஓய்வு கிடைத்தது. அப்போது, மற்றோர் அபாயத்திற்கு முடிவு கட்டுவதற்காக நாட்டிலிருந்து முஸ்லிம்களுக்கு புறப்பட நேரிட்டது. அதுவரை குறைஷிகள் தமது வடக்குப் பக்க வணிகத்திற்(கு செல்வதற்)காக பொதுவாக ஹிஜாஸின் கடற்கரை வழிப் பாதை வழியாக சிரியாவின் பக்கம் சென்று கொண்டிருந்தார்கள். ஆனால், தற்போது அவர்கள் அந்தப் பாதையை கைவிட்டு விட்டனர். ஏனெனில், அந்தப் பகுதியைச் சார்ந்த கோத்திரங்கள் முஸ்லிம்களின் நட்புக் கோத்திரமாக ஆகியிருந்தன. மேலும், அங்கு தீங்கிழைப்பதற்கான வாய்ப்பு குறைஷிகளுக்கு குறைவாக இருந்தது. இன்னும் கூறப்போனால், அது போன்ற சூழலில் அவர்கள் இந்த கடற்கரை வழிப் பாதையை தங்களுக்கு அபாயம் வாய்ந்ததாக கருதியிருந்தனர். முஸ்லிம்களால் ஆபத்து இருந்தது என்ற காரணம் மட்டுமே கிடையாது.மாறாக, அவர்கள் என்ன செயல்களை செய்ய விரும்பிக் கொண்டிருந்தார்களோ அதற்கு வாய்ப்பில்லை என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். அதாவது, அந்தக் கோத்திரங்கள் முஸ்லிம்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டுள்ள காரணத்தால் அவர்கள் தங்களுக்கு ஒத்துழைப்பு தர மாட்டார்கள்; மேலும், தங்களால் முஸ்லிம்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த முடியாது என்பது அவர்களின் எண்ணமாக இருந்தது.

எவ்வாறு இருப்பினும், அப்போது அவர்கள் அந்த வழிப் பாதையை கைவிட்டு விட்டு ஈராக்கிற்கு செல்லும் நஜதி வழிப் பாதையை மேற்கொண்டார்கள். அதன் சுற்று வட்டாரத்தில் குறைஷிகளின் நண்பர்களும், முஸ்லிம்களின் உயிர் பகைவர்களும் (வசித்து) இருந்தனர். முதலாவது வழிப் பாதை எதுவாக இருந்தது என்றால், அங்கு இருந்த மக்கள் முஸ்லிம்களுடன் உடன்படிக்கை செய்திருந்தனர். மேலும், எந்த

வழிப் பாதையை குறைஷிகள் மேற்கொண்டனரோ அங்கு குறைஷிகளுடன் உடன்படிக்கை செய்திருந்த மக்களாக அவர்கள் இருந்தனர். அங்கு பனூ ஸுலைம் மற்றும் பனூ ஃகத்ஃபான் கோத்திரத்தைச் சேர்ந்த முஸ்லிம்களின் உயிர் பகைவர்களான மக்களும் கோத்திரங்களும் வசித்து வந்தனர். ஆக, மக்கத்து குறைஷிகளின் ஒரு வணிகக் குழு நஜதி வழிப் பாதை வழியாக கடந்து செல்ல இருக்கின்றது என்ற தகவல் ஜமாதில் ஆகிர் மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைத்தது. குறைஷிகளின் குழுக்கள் கடற்கரை மார்க்கமாக கடந்து செல்வது முஸ்லிம்களுக்கு ஆபத்தானதாக இருந்தது. ஆக, நஜதி வழியாக அவர்கள் கடந்து செல்வது என்பது அப்படிப்பட்டதாக இருந்தது. இன்னும் கூறப்போனால், இதைக் காட்டிலும் அபாயகரமானதாக இருந்தது. ஏனெனில், கடற்கரை வழிப் பாதைக்கு எதிர் திசையில் அந்த வழியில் குறைஷியர்களைப் போன்றே முஸ்லிம்களின் இரத்தத்தின் மீது தாகம் கொண்டிருந்த குறைஷியர்களின் நட்புக் கோத்திரங்கள் வசித்து வந்தன. அவர்களுடன் இணைந்து கொண்டு குறைஷிகள் மிக எளிதாக மதீனாவில் மறைமுகமான தாக்குதல் தொடுத்திருக்க முடியும் அல்லது ஏதாவது தீங்கிழைத்திருக்க முடியும்.

அடுத்து, குறைஷிகளை பலவீனப்படுத்துவதற்காகவும் அவர்களை சமாதானம் செய்து கொள்வதன் பக்கம் இணங்க வைக்கும் நோக்கத்தின் கீழும் இது அவசியமானதாக இருந்தது; அதாவது, அந்த வழிப்பாதையிலிருந்தும் அவர்களை தடுத்து நிறுத்த வேண்டியது அவசியமானதாக இருந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த செய்தி கிடைத்த உடனேயே தம்மால் விடுதலை செய்யப்பட்டிருந்த அடிமையான ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் தலைமையில் தமது ஸஹாபிகளின் ஒரு குழுவை அனுப்பி வைத்தார்கள். ஸைது(ரலி) அவர்கள் மிகவும் சுறுசுறுப்புடனும், விவேகத்துடனும் தமது கடமையை நிறைவேற்றினார்கள். மேலும் நஜதின் கர்தஃ என்ற இடத்தில் வைத்து அந்த இஸ்லாத்தின் எதிரிகளை பிடித்து விட்டார்கள். மேலும், அந்த திடீர் தாக்குதலால் பதற்றமடைந்து குறைஷிய மக்களின் அந்தக் குழுவினருடைய செல்வத்தையும், மேலும் அவர்களுடைய பொருட்களையும் அவர்கள் விட்டு விட்டு ஓடிவிட்டனர். மேலும், ஸைது பின் ஹாரிஸா (ரலி) மற்றும் அன்னாருடைய தோழர்கள் ஒரு பெரும் போர் செல்வத்துடன் மதீனாவிற்கு வெற்றி வாகை சூடியவாறு திரும்பினார்கள்.

குறைஷியர்களின் இந்தக் குழுவை வழிநடத்தியது ஃபுராத் என்ற பெயர் கொண்ட நபர் ஆவார். அவர் முஸ்லிம்களுடைய கரங்களில் பிடிபட்டார். மேலும், முஸ்லிம் ஆனதால் விடுதலை செய்யப்பட்டார் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் எழுதியுள்ளனர். ஆனால் வேறு சில அறிவிப்புகளிலிருந்து தெரியவருவது என்னவென்றால், அவர் முஸ்லிம்களுக்கு எதிராக உளவு பார்ப்பவராக இருந்தார். ஆனால் பின்னர் முஸ்லிமாகி ஹிஜ்ரத் செய்து மதீனாவிற்கு வந்து விட்டார். அந்த நாட்களில் நிகழ்ந்த மற்றொரு சம்பவம் கஅப் பின் அஷ்ரஃபின் கொலை ஆகும். கஅப் பின் அஷ்ரஃப் மதீனத்து தலைவர்களில் ஒருவனாக இருந்தான். மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் உடன்படிக்கையும் செய்திருந்தான். ஆனால், உடன்படிக்கை செய்து கொண்டு, பின்னர் குழுப்பத்தை பரப்புவதற்கு முயற்சி செய்து வந்தான். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவனை கொலை செய்யுமாறு கட்டளையிட்டார்கள். புகாரியில் இந்த சம்பவத்தின் விவரம் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ்(ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: கஅப் பின் அஷ்ரஃபின் கதையை யார் முடிப்பார்? ; அவன் அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்துள்ளான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது, அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களே! நான் அவனைக் கொன்று விட வேண்டும் என்று தாங்கள் விரும்புகின்றீர்களா? என்று முஹம்மது பின் மஸ்லமா (ரலி) எழுந்து கேட்டார்கள். ஆம்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அந்த மனிதர் எங்களிடம் ஸதகா கேட்கின்றார்; மேலும் அவர் எங்களை துன்பத்தில் ஆழ்த்தி விட்டார் என்று கஅப் பின் அஷ்ரஃபிடம் சென்று முஹம்மது பின் மஸ்லமா (ரலி) கூறினார்கள்.

அதாவது அந்த நபர் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி அன்னார் (ரலி) கூறுகின்றார்கள். மேலும், அன்னார் (ஸல்) ஸதகா கேட்டதாகவும், துன்பத்தில் ஆழ்த்தியதாகவும் கூறுகின்றார்கள்.

இதனால் நான் உன்னிடத்தில் கடன் வாங்குவதற்காக வந்துள்ளேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அவன் கூறினான்: இறைவன் மீது ஆணையாக! நீர் அவரால் மிகுந்த துன்பத்திற்கு ஆளாவீர். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் துன்பத்திற்கு ஆளாவீர்; மேலும், விலகி விடுவீர் என்று அவன் கூறினான்.

எவ்வாறு இருப்பினும், முஹம்மது பின் மஸ்லமா (ரலி) கூறினார்கள்: நாங்கள் அவரை பின்பற்றி விட்டோம்; எனவே முடிவு என்னவாகின்றது? என்று பார்க்கும் வரை அவரை விட்டு விலக நாங்கள் விரும்பவில்லை. எங்களுக்கு ஒன்றோ இரண்டோ வஸக் கடனாக தாரும்.

அப்படியென்றால், என்னிடத்தில் எதையாவது அடகு வையுங்கள் என்று கஅப் பின் அஷ்ரஃப் கூறினான். என்னிடத்தில் என்ன பொருளை அடமானமாக எதிர்பார்க்கின்றீர்? என்று முஹம்மது பின் மஸ்லமா (ரலி) கேட்டார்கள்.அதற்கு, அவன் உங்களுடைய பெண்களை என்னிடத்தில் அடமானம் வையுங்கள் என்று கூறினான். அதற்கு, அவர் நீர் அரபு நாட்டில் அனைவரையும் விட மிகவும் அழகானவன் ஆவீர். பிறகு எப்படி பெண்களை அடகு வைப்பது? என்று அன்னார் (ரலி) கேட்டார்கள். உங்களுடைய மகன்களை என்னிடத்தில் அடமானம் வையுங்கள் என்று கூறினான். நாங்கள் இருக்கும் நிலையில் அவர்களை எப்படி அடமானம் வைப்பது? ஓரிரு வஸத் தொகை கடனாகப் பெறுவதற்காக இவர்கள் அடமானம் வைக்கப்பட்டார்கள் என்று அவர்களில் ஒவ்வொருவரும் நகையாடப்படுவார்களே? அது எங்களுக்கு வெட்கத்திற்குரியதாகும். ஆயினும், உன்னிடத்தில் எங்களுடைய ஆயுதங்களை அடமானம் வைக்கின்றோம் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். ஆயுதங்கள் என்பது போர் தளவாடங்கள் ஆகும். இவ்வாறு மீண்டும் வருவதாக அன்னார் (ரலி) வாக்குறுதி கொடுத்தார்கள். அதற்கேற்ப அன்னார் (ரலி) இரவில் வந்தார்கள். அன்னாரோடு அபூ நாயிலா (ரலி) அவர்களும் இருந்தார்கள். அவர் பால் அருந்திய விதத்தில் கஅப் பின் அஷ்ரஃபினுடைய சகோதரராக இருந்தார். கஅப் அவர்களை கோட்டைக்குள் அழைத்தான். அவர்கள் கோட்டைக்குள் சென்றதும், அவன் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தான். அவனுடைய மனைவி இந்த நேரத்தில் நீங்கள் எங்கே செல்கின்றீர்கள்? என்று கேட்டாள். அதற்கு இவர்கள் முஹம்மது பின் மஸ்லமா மற்றும் என்னுடைய சகோதரர் நாயிலா ஆவர்; இவர்கள் என்னை அழைத்துள்ளனர்; எனவே நான் அவர்களிடத்தில் செல்கின்றேன் என்று கஅப் பின் அஷ்ரஃப் கூறினான். அதற்கு, நான் இரத்தம் சிந்துவதைப் போன்ற ஓசையைக் கேட்கிறேன் என்று அவள் கூறினாள். அப்போது, கண்ணியத்திற்குரிய மனிதரை, இரவு நேரத்தில் தாக்குதலுக்காக அழைத்தாலும் அவர் கண்டிப்பாக செல்வார் என்று அவன் கூறினான். மேலும், முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் தம்முடன் மேலும் இரண்டு நபர்களை அழைத்து வந்திருந்தார்கள். முஹம்மது பின் மஸ்லமா கூறுகின்றார்கள்: கஅப் பின் அஷ்ரஃப் வந்ததும், நான் அவனுடைய முடியை பிடித்துக் கொள்வேன்; மேலும் அதனை நுகர்வேன்; நான் அவனது தலையை வலுவாக பிடிப்பதை நீங்கள் பார்த்து விட்டால் பிறகு நீங்கள் முன்னால் வந்து அவனது கதையை முடித்து விட வேண்டும் என்று அவர்களிடம் அதாவது தம்முடன் வந்தவர்களிடம் அன்னார் (ரலி) கூறியிருந்தார்கள். கஅப் பின் அஷ்ரஃப் கீழே அன்னாரிடத்தில் இறங்கி வந்தான். அவன் போர்வையை போர்த்திக் கொண்டு இருந்தான். அதிலிருந்து நறுமணம் வந்து கொண்டிருந்தது. முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் கூறினார்கள்: இன்றுள்ள நறுமணத்தைப் போன்ற நறுமணத்தை நான் ஒருபோதும் எங்கும் நுகர்ந்ததில்லை. அதாவது இதை விட சிறந்த நறுமணத்தை நான் நுகரவில்லை என்று கூறினார்கள்.

கஅப் பின் அஷ்ரப் கூறினான்: என்னிடத்தில் அரபுப் பெண்களில் அனைவரையும் விட மிக அதிகமாக நறுமணம் வீசக் கூடிய மற்றும் எல்லாரையும் விட அழகு வாய்ந்த பெண்கள் உள்ளனர். அப்போது, முஹம்மது பின் மஸ்லமா கூறினார்கள்: நீர் என்னை அனுமதித்தால் நான் உனது தலையை நுகர்ந்து கொள்ளட்டுமா? என்று கேட்டார்கள். அதற்கு சரி! என்று அவன் கூறியபோது அன்னார் (ரலி) முதலில் நுகர்ந்தார்கள். பிறகு உடன் இருந்தவர்களையும் நுகருமாறு கூறினார்கள். பின்னர் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவனது (தலையை) வலுவாகப் பிடித்துக் கொண்டு உடன் வந்தவர்களிடம் கூறியதும் அவர்கள் அவனை கொலை செய்து விட்டனர். பிறகு, அன்னார்(ரலி) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்றடைந்து தகவலைக் கூறினார்கள்.

கஅப் காயமுற்று இருந்தது பற்றிய கூடுதல் விவரம் உம்தத்துல் காரி என்ற நூலில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) தமது நண்பர்களோடு இணைந்து அவனை தாக்கி கொன்றபோது அவர்களின் வாளின் முனை ஹஸ்ரத் ஹாரிஸ் பின் அவ்ஸ் (ரலி) அவர்களை குத்தி விட்டது. மேலும், அன்னார் காயமடைந்து விட்டார்கள். தமது நண்பர்களுடைய வாளின் முனையினால் அன்னார் (ரலி) காயமடைந்தார்கள்.

அன்னாரோடு இருந்தவர்கள் அன்னாரை விரைவாக மதீனாவிற்கு எடுத்து வந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹாரிஸ் பின் அவ்ஸ் (ரலி) அவர்களின் காயத்தின் மீது தமது உமிழ் நீரைத் தடவினார்கள். அதன் பிறகு அன்னாருக்கு அந்தத் துன்பம் நீங்கி விட்டது.

கஅப் பின் அஷ்ரஃபின் கொலை சம்பவம் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் எழுதப்பட்டுள்ளது. அதனை இங்கு நான் சுருக்கமாக எடுத்துரைத்து விடுகின்றேன்: பத்ர் போரானது மதீனத்து யூதர்களின் அகத்தில் இருந்த வெறுப்பை வெளிப்படுத்தி இருந்தது. மேலும், பனூ கைனுகா கோத்திரத்தினர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டிருந்த நிகழ்வும் பிற கோத்திரத்தினரை சீர்திருத்தத்தின் பக்கம் வரவிடாமல் தடுத்திருந்தது.அவர்கள் தங்களது தீய நடவடிக்கைகளிலும், குழப்பம் விளைவித்தல் போன்ற செயல்களிலும் முன்னேறிக் கொண்டே சென்றனர். கஅப் பின் அஷ்ரஃபின் கொலை சம்பவம் இந்தத் தொடரின் ஓர் அம்சமாகும். கஅப் பின் அஷ்ரஃப் மார்க்க ரீதியில் ஓர் யூதனாக இருந்தபோதிலும் அவன் யூத வம்சத்தை சேர்ந்தவனாக இருக்கவில்லை. மாறாக, அவன் ஓர் அரபியாக இருந்தான். அவனது தந்தை அஷ்ரஃப் பனூ நப்ஹானைச் சேர்ந்த ஒரு விவேகம் மிக்க மனிதராக இருந்தார். அவர் மதீனாவிற்கு வந்து பனூ நளீர் கோத்திரத்துடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். அவர்களது நண்பராக இருந்தார். இறுதியில் தனது அதிகாரம் மற்றும் செல்வாக்கை உருவாக்கிக் கொண்டார். இதனால் பனூ நளீர் கோத்திரத்தின் பெரும் தலைவர் பனூ ராஃபி பின் அப்தில் ஹகீக் தனது மகளை அவருக்கு மணமுடித்துக் கொடுத்தார். அந்தப் பெண்ணின் வயிற்றில் கஅப் பிறந்தான். அவன் பெரியவனாகி தனது தந்தையை விட உயர்ந்த அந்தஸ்தை தமது கோத்திரத்தில் அடைந்தான். எந்த அளவிற்கு என்றால், இறுதியில் முழு அரேபிய நாட்டின் யூதர்களும் அவனை தங்களின் தலைவனாக கருதும் அளவிற்கு அவன் செல்வாக்கைப் பெற்று விட்டான். கஅப் ஓர் அழகானவனாக இருந்தது மட்டுமின்றி சொல் வன்மை கொண்ட கவிஞனாகவும், மிகுந்த செல்வம் படைத்தவனாகவும் இருந்தான். எப்போதும் தனது சமுதாயத்தின் அறிஞர்கள் மற்றும் செல்வாக்கு படைத்த நபர்களை தனது செல்வத்தால் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தான். ஆனால், ஒழுக்கத்தின் அடிப்படையில் அவன் மிகவும் மோசமானவனாக இருந்தான். இரகசிய திட்டம் தீட்டுதல், மோசடி செய்தல் போன்றவற்றில் மிகவும் திறன் வாய்ந்தவனாக இருந்தான். அவனிடத்தில் எல்லா வகையான தீமைகளும் இருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்றபோது, கஅப் பின் அஷ்ரஃபும், ஏனைய யூதர்களுடன் உடன்படிக்கையில் இணைந்து கொண்டான். அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் யூதர்களுக்கு இடையில் பரஸ்பரம் நட்பு, அமைதி மற்றும் ஒன்றாக போர் புரிதல் போன்றவை தொடர்பான எழுத்துப்பூர்வமான உடன்படிக்கையாக இருந்தது. வெளிப்படையாக உடன்படிக்கை செய்து கொண்டிருந்தான். ஆனால், அவனது உள்ளத்தில் பகைமையுணர்வு மற்றும் வெறுப்புணர்வின் நெருப்பு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. அவன் இரகசிய சூழ்ச்சிகளாலும், திட்டங்களாலும் இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுனரை எதிர்க்கத் துவங்கினான்.ஒவ்வோர் ஆண்டும் யூத அறிஞர்களுக்கு ஏராளமான உதவிகளை அவன் செய்து வந்தான் என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத் செய்து வந்த பிறகு இந்த மக்கள் அவனிடம் இருந்து ஆண்டு உதவித் தொகையை பெறுவதற்காக சென்றார்கள். அவர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைக் குறித்து அவர்களிடத்தில் அவன் பேசத் துவங்கினான். அன்னார்(ஸல்) தொடர்பாக மார்க்க நூல்களின் அடிப்படையில் கருத்தை கூறுமாறு அவர்களிடத்தில் கேட்டான். அதற்கு அவர்கள் நமக்கு தவ்ராத்தில் வாக்குறுதி வழங்கப்பட்டுள்ள நபியாகவே இவர் தெரிகிறார் என்று அவர்கள் கூறினர். இந்த பதிலைக் கேட்டு கஅப் மிகவும் கோபமுற்றான். மேலும், அவர்களை மிகவும் கடிந்து கொண்டு ஏசி பேசினான். மேலும், அவர்களுக்கு கொடுத்து வந்த உதவித் தொகையையும் கொடுக்கவில்லை. யூத ஆலிம்களுக்கு தங்களுடைய வருமானம் நின்று விட்டதும் சிறிது காலத்திற்கு பிறகு அவர்கள் கஅபிடத்தில் சென்றார்கள். மேலும், அடையாளங்களைப் புரிவதில் எங்களுக்கு தவறு ஏற்பட்டு விட்டது. நாங்கள் மீண்டும் சிந்தித்து பார்த்தோம். உண்மையில் நமக்கு வாக்குறுதி வழங்கப்பட்டுள்ள அந்த நபி முஹம்மது (ஸல்) அவர்கள் கிடையாது என்று கூறினர். இந்த பதிலால் கஅபினுடைய எண்ணம் நிறைவேறியது. அவன் மகிழ்ச்சியடைந்து அவர்களுக்கான ஆண்டு உதவித் தொகையை வழங்கினான். எவ்வாறு இருப்பினும், இது ஒரு மார்க்க கருத்து வேறுபாடாக இருந்தது. இது மோசமான நிலைகளை எட்டச் செய்தது. ஆனால், இந்தக் குற்றத்தின் அடிப்படையில் அவனுக்கு தண்டனை வழங்கும் குற்றமாக அது இருக்கவில்லை. ஆனால் அதன் பிறகு கஅபின் எதிர்ப்பு அபாயகரமான நிலையை அடைந்தது. இறுதியில் பத்ர் போருக்குப் பிறகு அவன் எப்படிப்பட்ட நடவடிக்கையை மேற்கொண்டான் என்றால் அது மிகவும் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்தது. அதன் விளைவாக முஸ்லிம்களுக்கு மிகவும் அபாயகரமான நிலைமைகள் தோன்றின. பத்ர் போருக்கு முன்னர் முஸ்லிம்களின் ஈமான் ஒரு தற்காலிகமானது; மெல்ல, மெல்ல தாமாகவே இவர்கள் கலைந்து சென்று விடுவர்; மேலும் தங்களின் தாய் மார்க்கத்திற்கு திரும்பி வந்து விடுவார்கள் என்று கஅப் பின் அஷ்ரஃப் கருதிக் கொண்டிருந்தான். ஆனால், பத்ர் சந்தர்ப்பத்தில் அவன் எதிர்பாராத வெற்றி முஸ்லிம்களுக்கு கிடைத்தபோது, குறைஷிகளின் பெரும்பாலான தலைவர்கள் கொல்லப்பட்டனர். இதைக் கண்டு இஸ்லாம் அழிவதாக தென்படவில்லை என்பதை அவன் புரிந்து கொண்டான். எனவே பத்ர் போருக்குப் பிறகு, இஸ்லாத்தை அழிப்பதற்கு அவன் தனது முழுமையான முயற்சிகளை செய்வதாக உறுதி எடுத்துக் கொண்டான். மேலும், அவனுடைய உள்ளத்தில் இருந்த பொறாமை, காழ்ப்புணர்ச்சி போன்றவை முதன் முதலில் பத்ர் போரில் வெற்றி பெற்ற தகவல் மதீனா வந்தடைந்த போதுதான் வெளிப்பட்டது. அந்த தகவலை கேட்டதும் இவ்வாறு அறிவித்தான்: அதாவது, இந்த தகவல் முற்றிலும் பொய்யானதாக தெரிகின்றது; ஏனெனில்,குறைஷிகளின் பெரும் பெரும் படைகளின் மீது முஹம்மது (ஸல்) அவர்களுக்கு வெற்றி கிடைப்பது சாத்தியமில்லை ; மேலும், மக்காவின் இவ்வளவு பிரபலமான தலைவர்கள் மண்ணோடு மண்ணாகி விடுவார்கள் என்பதும் சாத்தியமில்லை. ஒருவேளை இந்த செய்தி உண்மையாக இருக்குமென்றால் பின்னர் இதுபோன்ற வாழ்வை விட மரணிப்பதே மேல் என்று அவன் கூறினான்.

எவ்வாறு இருப்பினும் அந்த செய்தி உறுதி செய்யப்பட்டது. உண்மையிலேயே பத்ர் போரின் வெற்றியானது இஸ்லாத்திற்கு உறுதிப்பாட்டடை வழங்கி விட்டது என்பதை கஅப் அறிந்து கொண்டான். அவன் அதனை கற்பனையிலும் எண்ணிப் பார்த்திருக்கவில்லை. எனவே அவ்வாறு நிகழ்ந்ததும், அவன் கோபத்தால் நிரம்பினான். மேலும், உடனடியாக பயணத்திற்கான ஆயத்தங்களை செய்து அவன் மக்காவை நோக்கி புறப்பட்டான். இதற்கு தனது வார்த்தை ஜாலம், கவிதை இவற்றின் உதவி கொண்டு குறைஷியர்களின் உள்ளத்தில் ஏற்கனவே எரிந்து கொண்டிருந்த நெருப்பை மேலும் கொழுந்து விட்டு எரியச் செய்து கொண்டிருந்தான். அவர்களுடைய உள்ளத்தில் முஸ்லிம்களின் இரத்தத்தைக் குடிக்க வேண்டும் என்ற தணியாத தாகத்தை ஏற்படுத்தினான். அவர்களுடைய உள்ளங்கள் பழிவாங்கும் உணர்வு மற்றும் வெறுப்பால் நிரம்பின. கஅப் இவ்வாறு தூண்டி விட்டதன் விளைவாக அவர்களின் உணர்வுகளில் ஓர் உச்சபட்சமான வேகம் தோன்றியது. அவர்களை கஅபாவின் முற்றத்திற்கு அழைத்து வந்து கஅபாவின் திரைச் சீலையை அவர்களின் கைகளில் கொடுத்து, இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுனரை இந்த உலகத்தை விட்டு துடைத்தெறியாத வரை நாங்கள் நிம்மதியாக அமர மாட்டோம் என்று அவர்களை சத்தியம் செய்ய வைத்தான். மக்காவில் இதுபோன்ற நெருப்பின் சூழலை உருவாக்கிவிட்டு அந்த நற்பேறு கெட்டவன் அரேபியாவின் மற்ற கோத்திரங்களிடம் சென்றடைந்தான். ஒவ்வொரு சமுதாயமாக சுற்றித் திரிந்து அந்த மக்களை முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டி விட்டான். பிறகு அவன் மதீனாவை வந்தடைந்து தனது வேகமூட்டும் கவிதைகளில் மிகவும் மோசமாக முஸ்லிம் பெண்களைப் பற்றிக் கூறினான். எந்த அளவிற்கு என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குடும்பப் பெண்களையும் அந்த தீய கவிதைகளுக்கு இலக்காக்குவதற்கும் தயங்கவில்லை. பிறகு நாட்டில் அந்தக் கவிதைகளைக் குறித்த சர்ச்சையை அவன் துவங்கி வைத்தான். இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கு சதித் திட்டம் தீட்டினான். விருந்து போன்ற ஏதோ சாக்குபோக்குகளைக் கூறி தனது வீட்டிற்கு அன்னாரை அழைத்து சில யூத இளைஞர்களைக் கொண்டு அன்னாரைக் கொலை செய்ய அவன் திட்டம் தீட்டியிருந்தான். ஆனால், இறைவனின்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

அருளினால் அது குறித்து முன்னரே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்தது. எனவே அவனது சதித் திட்டம் வெற்றியடையவில்லை. நிலைமை இந்த அளவிற்கு மோசமடைந்தது. கஅபிற்கு எதிராக உடன்படிக்கையை முறித்தல், கிளர்ச்சி செய்தல், போருக்கு தூண்டுதல், குழப்பம் விளைவித்தல், அசுத்தமான வகையில் பேசுதல், கொலைக்கான சதித் திட்டம் தீட்டுதல் போன்ற குற்றச்சாட்டுகள் ஆதாரப்பூர்வமாக நிரூபணமாகின. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா வந்தடைந்த பிறகு மதீனா வாசிகளுடன் அந்த சமுதாயங்களிடத்தில் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையில் மதீனாவின் குடியரசு அரசாங்கத்தின் அதிபராக இருந்தார்கள். எனவே கஅப் பின் அஷ்ரஃப் தனது செயல்களின் அடிப்படையில் கொலை செய்யப்படுவதற்கு தகுதி வாய்ந்தவனாக இருந்தான் என்று அன்னார் (ஸல்) தீர்ப்பு வழங்கினார்கள். மேலும், தமது சில ஸஹாபிகளிடத்தில் அவனைக் கொலை செய்யுமாறு கூறினார்கள். ஆனால் அந்த நேரத்தில் கஅப் செய்த குழப்பத்தின் காரணமாக மதீனாவில் எத்தகைய ஒரு சூழல் நிலவி வந்தது? என்றால் அவனுக்கு எதிராக வெளிப்படையாக அறிவிப்பு செய்து அவனை கொலை செய்தால் அதனால் மதீனாவில் ஒரு அபாயகரமான உள்நாட்டுப் போர் துவங்குவதற்கு சாத்தியம் இருந்தது. அதில் எந்த அளவிற்கு இரத்தம் சிந்தப்பட்டிருக்கும் என்பதை நம்மால் கணிக்க முடியாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எல்லா வகையிலும் ஆகுமான தியாகங்களை செய்து சமுதாயங்கள் ரத்தம் சிந்துவதை தடுக்க விரும்பினார்கள். இருவரும் பரஸ்பரம் சண்டையிட்டுக் கொண்டு முஸ்லிம்களுக்கும், யூதர்களுக்கும் இழப்பு ஏற்பட்டுக் கொள்ளட்டும்; ஒருவர் மற்றவரை கொல்லட்டும் என்று அன்னார் (ஸல்) விரும்பவில்லை. எனவே கஅபை பகிரங்கமாக கொலை செய்ய வேண்டாம்; மாறாக, சில நபர்கள் சேர்ந்து அமைதியாக, தருணம் பார்த்து அவனை கொலை செய்துவிடுங்கள் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும், இந்த பொறுப்பை அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு தூய ஸஹாபியான முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். மேலும், எந்த வழிமுறையை மேற்கொண்டாலும், அவ்ஸ் கோத்திரத்தின் தலைவர் ஸஃது பின் மஆஸ் (ரலி) அவர்களிடத்தில் ஆலோசனை செய்து கொள்ளுங்கள் என்றும் அவர்களுக்கு வலியுறுத்தியிருந்தார்கள்.

அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அமைதியாக அவனை கொலை செய்வதற்கு ஏதாவது கூறவேண்டியது வரும்; அதாவது,ஏதாவது சாக்குப் போக்குகளை உருவாக்க வேண்டியது வரும்; அதன் உதவி கொண்டு கஅபை அவனது வீட்டிலிருந்து வெளியேற்றி கொண்டு சென்று ஒரு பாதுகாப்பான இடத்தில் வைத்து அவனை கொலை செய்ய வேண்டியது வரும் என்று முஹம்மது பின் மஸ்லமா (ரலி) கூறினார்கள்.

அதற்கு, ஓர் அமைதியான வழிமுறையில் கொலை செய்வதை கைவிடுவதனால் ஏற்படும் மாபெரும் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு,சரி! செய்யுங்கள்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஆக, ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் ஸஃது பின் மஆஸ் (ரலி) அவர்களின் ஆலோசனையோடு அபூநாயிலா மற்றும் மேலும் 2,3 ஸஹாபிகளை தம்முடன் அழைத்துக் கொண்டார்கள். மேலும், கஅபின் வீட்டிற்குச் சென்றார்கள். கஅபை அவனுடைய வீட்டிலிருந்து வெளியே அழைத்துக் கூறினார்கள்: எங்களுடைய ஸாஹிப், அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எங்களிடம் ஸதகா கேட்கின்றார். நாங்களோ பொருளாதார பின்னடைவில் இருக்கின்றோம்; நீ பரிவுடன் கொஞ்சம் கொடுக்க முடியுமா? என்று கேட்டனர்.

இதைக் கேட்ட கஅப் மகிழ்ச்சியடைந்தான். மேலும், அல்லாஹ்வின் மீது ஆணையாக! அந்த நபரால் நீங்கள் துன்பங்களுக்கு ஆளாகி நீங்கள் அவரை விட்டு விலகிவிடும் நாள் மிக தொலைவில் இல்லை என்று கஅப் கூறினான். இதற்கு முஹம்மது பின் மஸ்லமா இவ்வாறு பதில் கூறினார்கள்: எவ்வாறு இருப்பினும், நாங்கள் முஹம்மது (ஸல்) அவர்களை ஒப்புக் கொண்டிருக்கின்றோம். இனி இதன் முடிவு என்னவாக இருக்கின்றது என்பதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால், நீ கடன் தருவாயா? மாட்டாயா? என்று கூறு! அதற்கு, நீங்கள் ஏதேனும் ஒன்றினை என்னிடம் அடகு வைத்தால் நான் கொடுக்கின்றேன் என்று கஅப் கூறினான். முதலில் அவன் பெண்களை அடமானம் வைக்குமாறு கூறினான். பின்னர் மகன்களை அடகு வைக்குமாறும் கூறினான்.

ஆனால் நான் முன்னர் புகாரியின் சான்றுகளை எடுத்து வைத்துக் கூறியபடி ஆயுதங்களை அவனிடம் அடமானம் வைப்பதற்கு அவர்கள் ஒப்புக் கொண்டனர். இரவு வருவதாக வாக்குறுதி அளித்து விட்டு முஹம்மது பின் மஸ்லமா மற்றும் அவரது தோழர்கள் திரும்பிச் சென்று விட்டனர். இரவுப் பொழுது வந்ததும், அவர்கள் ஆயுதங்கள் போன்றவற்றை எடுத்துக் கொண்டு கஅபின் வீட்டிற்குச் சென்றனர். மேலும் அவனை வீட்டை விட்டு வெளியே வரவழைத்து பேசிக் கொண்டபடியே ஒரு பக்கமாக அழைத்து வந்தனர். பின்னர் சிறிது நேரம் கழிந்த பிறகு நடந்து சென்றவாறே அவனை பிடித்து ஆயுதம் வைத்திருந்த அந்த ஸஹாபிகள் அவன் மீது வாள் வீசினர். மேலும் அவனைக் கொன்று விட்டனர்.

எவ்வாறு இருப்பினும் அவன் கொலையுண்டு விழுந்தான். மேலும் முஹம்மது பின் மஸ்லமாவும் அன்னாருடன் இருந்தவர்களும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தடைந்தார்கள். மேலும், அவன் கொலை செய்யப்பட்டதைக் குறித்த தகவலைக் கொடுத்தனர். கஅபினுடைய கொலையைக் குறித்த சம்பவம் பரவியதும் நகரத்தில் பரபரப்பு தொற்றிக் கொண்டது. மேலும் யூதர்கள் வெகுண்டு எழுந்தனர். அடுத்த நாளில் காலையில் யூதர்களின் ஒரு குழுவினர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வந்தடைந்து எங்களுடைய தலைவர் கஅப் இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று முறையிட்டனர். அப்போது, அவர்களின் பேச்சைக் கேட்டு விட்டு, கஅப் பின் அஷ்ரஃப் என்னென்ன குற்றங்களை புரிந்திருக்கின்றார் என்று உங்களுக்கு தெரியுமா? என அவர்களிடம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வினவினார்கள். பின்னர், உடன்படிக்கை மீறுதல், போரை தூண்டுதல், குழப்பம் விளைவித்தல், ஆபாசமாக பேசுதல், கொலை செய்ய திட்டம் தீட்டுதல் போன்ற கஅப் பின் அஷ்ரஃபின் குற்றங்களை சுருக்கமாக அவர்களுக்கு அன்னார் (ஸல்) நினைவூட்டினார்கள். அதைக் கேட்டு அந்த மக்கள் அஞ்சி அமைதியாகிவிட்டார்கள். அதன் பிறகு, நீங்கள் குறைந்தபட்சம் இனி வரும் நாட்களிலாவது அமைதி மற்றும் ஒத்துழைப்புடன் நடந்து கொள்ள வேண்டும்; வெறுப்பு மற்றும் குழப்பத்திற்கான விதையை விதைக்கக் கூடாது என்று அவர்களிடம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். யூதர்களின் சம்மதத்துடன் எதிர்காலத்திற்காக ஒரு புதிய உடன்படிக்கை எழுதப்பட்டது. மேலும், யூதர்கள் முஸ்லிம்களுடன் சமாதானத்துடன் இருப்பதாகவும், குழப்பத்திற்கான வழிகளிலிருந்து விலகி இருப்பதாகவும் புதிதாக வாக்குறுதி கொடுத்தனர். இந்த உடன்படிக்கையானது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடைய பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. அதன் பிறகு கஅப் பின் அஷ்ரஃபினுடைய கொலையை எப்போதாவது சுட்டிக் காட்டி முஸ்லிம்களை குற்றஞ்சாட்டியதாக வரலாற்றில் எங்குமே எழுதப்படவில்லை. ஏனெனில், கஅபிற்கு உரிய தண்டனை கொடுக்கப்பட்டிருந்தது என்பதை அவர்களின் உள்ளங்கள் உணர்ந்திருந்தன. அந்த நேரத்தில் நடைமுறையில் இருந்த சட்டம் மற்றும் வழிமுறைக்கேற்ப கஅபுடன் நடந்து கொள்ளப்பட்டது. யூதர்கள் அமைதியாக இருந்தனர் என்ற விஷயம் அந்தத் தண்டனையை சரியானதாக கருதினார்கள் என்பதை எடுத்துரைக்கின்றது.

சில வரலாற்று ஆசிரியர்கள் பிற்காலத்தில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு ஆகுமற்ற கொலையை செய்தார்கள்; அது தவறானதாகும் என்று ஆட்சேபனை செய்கின்றனர். அது தவறானதாக இருக்கவில்லை என்பதை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில், கஅப் பின் அஷ்ரஃப் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் முறையாக அமைதிக்கான உடன்படிக்கை செய்திருந்தான்; மேலும், முஸ்லிம்களுக்கு எதிராக நடவடிக்கையில் ஈடுபடுவது என்பது ஒரு புறம் இருக்கட்டும்; வெளிப்புற எதிரிகளுக்கு எதிராக முஸ்லிம்களுக்கு உதவி செய்வதாகவும், முஸ்லிம்களுடன் நட்பு ரீதியான உறவு கொள்வதாகவும் அவன் உடன்படிக்கை செய்திருந்தான். அவன் இந்த உடன்படிக்கையின் அடிப்படையில் மதீனாவில் நிலைப் பெற்றிருந்த குடியரசு ஆட்சியில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தலைவராக இருப்பார்கள்; மேலும், எல்லா விவகாரங்களிலும் அன்னாருடைய தீர்ப்பை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதையும் ஒப்புக் கொண்டிருந்தான்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: வரலாற்றிலிருந்து நிரூபணமாவது என்னவென்றால் இந்த உடன்படிக்கையின் கீழ் யூதர்கள் தங்களது வழக்குகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் எடுத்துக் கொண்டு வந்தனர். மேலும் அன்னார் (ஸல்) அவற்றில் தீர்ப்புகளை வழங்கி வந்தார்கள். இதுபோன்ற சூழல்கள் இருக்கும்போது கஅப் அனைத்து உடன்படிக்கைகளையும் புறக்கணித்து விட்டான். மேலும், அதன்படி நடப்பதை விட்டு விட்டான். முஸ்லிம்களுடன் இன்னும் கூறப்போனால் அக்காலத்தில் இருந்த அரசாங்கத்திற்கு எதிராக துரோகம் செய்தான். இங்கு முஸ்லிம்களுக்கு எதிராக துரோகம் செய்தான் என்ற கேள்விக்கு இடமில்லை.

மாறாக, அரசாங்கத்திற்கு எதிராக அவன் துரோகம் செய்தான். ஏனெனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அரசாங்கத்தின் தலைவராக இருந்தார்கள். அடுத்து, மதீனாவில் குழப்பத்திற்கான விதையை விதைத்தான். மேலும், நாட்டில் போருக்கான நெருப்பை மூட்ட எண்ணினான். மேலும், முஸ்லிம்களுக்கெதிராக போர் செய்வதற்காக கோத்திரங்களை மிக அபாயகரமான முறையில் தூண்டி விட்டான். பின்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கும் திட்டம் தீட்டினான். இந்த அனைத்தையும் முஸ்லிம்கள் நாலாப்புறமும் சோதனைகளால் சூழப்பட்டிருந்த நேரத்தில் அவன் செய்தான். அவர்களுக்கு மேலும் கடினமான நிலைமைகளை உருவாக்கினான். இதுபோன்ற சூழல்களில் இன்னும் கூறப்போனல் இந்த அளவிலான அவனது குற்றங்கள் அவனுக்கு ஏதேனும் தண்டனை வழங்குவதற்கு தகுதியானவையாக இருக்கவில்லையா? எனவேதான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், இன்றைய நாட்களில் நாகரீகத்தில் முன்னேறியவர்கள் என்று கூறிக் கொள்ளும் நாடுகளில் கிளர்ச்சி, உடன்படிக்கையை முறித்தல், போர் நெருப்பை தூண்டுதல், குழப்பம் விளைவித்தல்,கொலை, சதித் திட்டம் தீட்டுதல் போன்ற குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு மரணத் தண்டனை கொடுக்கப்படுவதில்லையா? அவ்வாறிருக்க, இதனை எவ்வாறு ஆட்சேபனை செய்ய முடியும்?

இன்னும் சொல்வதென்றால் இன்றைய நாட்களில் பாலஸ்தீனத்தில் நடக்கக் கூடியவை இருக்கட்டும்; பாலஸ்தீனத்திற்கும், இஸ்ரேலுக்குமிடையில் நடக்கக் கூடியவை மிக மோசமானதாக இருக்கின்றது. பல வகையில் அது ஆகுமானதும் இல்லை.

அடுத்து அவன் கொலை செய்யப்பட்ட விதம் தொடர்பாக கேள்வி எழுகின்றது. அவனை அமைதியாக ஏன் கொன்றனர்? இரவு நேரத்தில் ஏன் அவன் கொல்லப்பட்டான்? இது தொடர்பாக நினைவில் கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், அரபு நாட்டில் அந்த நேரத்தில் முறையாக எந்தவொரு அரசாங்கமும் இருக்கவில்லை. ஒரு தலைவரை நியமித்தார்கள். ஆயினும், அவருடைய தீர்ப்பு மட்டுமே இருக்கவில்லை. மாறாக தங்களுடைய தீர்ப்புகளை பெற விரும்பினால் ஒவ்வொரு கோத்திரமும், ஒவ்வொரு மனிதனும் சுதந்திரமானதாகவும், அதிகாரம் வழங்கப்பட்டதாகவும் இருந்தன. ஒட்டுமொத்தமாக ஒருங்கிணைந்த விவகாரமாக இருந்தது என்றால் அவர்கள் அதனை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தனர்.கோத்திரங்கள் தங்கள் தரப்பில் முடிவெடுக்கக் கூடியவையாக இருந்தன என்றால் அவைகளே முடிவெடுத்து வந்தன. அதுபோன்ற சூழலில் கஅபிற்கு எதிராக வழக்கு தொடுத்து முறையான தீர்ப்பை பெறுவதற்கு எந்த நீதிமன்றம் இருந்தது? எனவே யூதர்களிடம் செல்வதற்கான கேள்வி எழுவதற்கே இடமில்லை. ஸுலைம் மற்றும் ஃகத்ஃபான் கோத்திரங்களிடத்தில் நீதி பெற விரும்பினால் அவர்களோ முந்தைய மாதத்தில் மூன்று, நான்கு முறை மதீனாவைத் தாக்குவதற்கு ஆயத்தம் செய்திருந்தனர். அவனும் அந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவனாகவே இருந்தான்.எனவே அவர்களிடமிருந்தும் எந்த நீதியும் கிடைக்காது என்பது வெளிப்படை. எவ்வாறு இருப்பினும், அப்போதைய நிலைமையை சிந்தித்துப் பாருங்கள்! பிறகு ஒருவன் எதிர்ப்பை தூண்டுதல், போரைத் தூண்டுதல், குழப்பம் விளைவித்தல், கொலைக்கான சதித் திட்டம் தீட்டுதல் போன்ற குற்றங்களின் காரணத்தினாலும், மேலும் அவன் உயிர் வாழ்வது என்பது தமக்கும், பொது மக்களின் அமைதிக்கும் ஆபத்தானது என்பதை உணர்ந்து தங்களது பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு சந்தர்ப்பம் பார்த்து அவனை கொலை செய்வதை தவிர முஸ்லிம்களுக்கு வேறு என்ன வழி இருந்தது? ஏனெனில், ஏராளமான அமைதியான குடிமக்களின் உயிரை அபாயத்தில் ஆழ்த்துவது மற்றும் நாட்டின் பொது அமைதியை சீர்குலை செய்வதற்கு பகரமாக ஒரு தீய மற்றும் குழப்பவாதியை கொலை செய்வது சிறந்த விஷயமாக இருந்தது. அல்லாஹ்வும் இதனையே கூறுகின்றான். குழப்பம் கொலையினும் கொடியது.

எவ்வாறு இருப்பினும், ஹிஜ்ரத்திற்கு பிறகு முஸ்லிம்கள் மற்றும் யூதர்களுக்கிடையில் நிகழ்ந்த உடன்படிக்கையின் படி அன்னாருக்கு ஒரு சாதாரண குடிமகன் என்ற அந்தஸ்து இருக்கவில்லை. மாறாக, அன்னார் (ஸல்) மதீனாவில் நிலை பெற்றிருந்த அந்தக் குடியரசு அரசாங்கத்தின் தலைவராக இருந்தார்கள். மேலும், அனைத்து விதமான சண்டைகள் மற்றும் அரசியல் விவகாரங்களில் எது சரியானதோ? அதற்கான கட்டளையை பிறப்பிப்பதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனவே அன்னார் (ஸல்) நாட்டின் பொது அமைதியை கருத்தில் கொண்டு கஅபின் குழப்ப செயல்களை கருத்தில் கொண்டு அவன் கொலை செய்யப்படுவதற்கு தகுதியானவன் என்ற தீர்ப்பை அன்னார் (ஸல்) வழங்கினால் அது ஓர் ஆட்சேபனைக்குரிய விஷயமாக இருக்க முடியாது.

ஆக, 1300 ஆண்டுகளுக்கு பிறகு இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்பவர்களின் இந்த ஆட்சேபனையை இன்றைய நாட்களில் Orientalists செய்கின்றனர்; கிழக்கு நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள் செய்கின்றனர்.இந்த ஆட்சேபனைகள் வீணானதாகும். ஏனெனில் அந்த நேரத்தில் அன்னாருடைய கூற்றைக் கேட்டு யூதர்கள் எந்த மறுப்பும் கூறவில்லை. இந்தக் காலகட்டத்தில் தான் ஹஸ்ரத் ஹஃப்ஸா பின்த் உமர் (ரலி) அவர்களின் இரண்டாவது திருமணமும் நடைபெற்றிருந்தது. ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகளாக இருந்தார்கள். அன்னாருக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் நடைபெற்ற திருமணத்தின் விவரம் இவ்வாறாகும். அதாவது, ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களின் கணவர் பத்ர் போரில் கலந்து கொண்டிருந்தார். பத்ர் போரில் பங்குபெற்று திரும்பியபோது நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார்.

போரில் கலந்து கொண்டிருந்தார். ஆனால் போரிலிருந்து திரும்பி வந்தபோது நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார்.

பின்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களை திருமணம் செய்து கொண்டார்கள். அதன் விவரம் புகாரியில் இவ்வாறு பதியப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ஹஃப்ஸா பின்த் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஹுனைஸ் பின் ஹுஸாஃபா (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு விதவையானார்கள். அன்னார் (ரலி) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளில் ஒருவராக இருந்தார்கள். அன்னார் பத்ர் போரிலும் கலந்து கொண்டிருந்தார்கள். அன்னார் மதீனாவில் மரணமடைந்தபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். அதாவது அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் உஸ்மான் பின் அஃப்ஃபான் (ரலி) அவர்களை சந்தித்தேன். அன்னாரிடம், ஹஃப்ஸாவைப் பற்றிக் கூறி, நீங்கள் விரும்பினால் ஹஃப்ஸா பின்த் உமர் (ரலி) அவர்களை உங்களுக்கு நான் நிக்காஹ் செய்து வைக்கின்றேன்.அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் நான் இதுதொடர்பாக சிந்திக்கின்றேன் என்று கூறினார்கள்.ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

எனவே நான் பல நாட்கள் வரை காத்திருந்தேன்; பின்னர் சில நாட்கள் கழித்து நான் இந்நாட்களில் திருமணம் செய்வது உகந்ததாக தெரியவில்லை என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) கூறிவந்தார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை சந்தித்து நீங்கள் விரும்பினால் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களை தங்களுக்கு நான் நிக்காஹ் செய்து வைக்கின்றேன் என்று கூறினேன். அதற்கு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அமைதியாகிவிட்டார்கள். எனக்கு எந்த பதிலும் வழங்கவில்லை. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மறுத்ததை விட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் மறுத்து விட்டார்களே என்ற வேதனை தான் எனக்கு அதிகமாக இருந்தது. கூறுகிறார்கள்: பின்னர் நான் சில நாட்கள் வரை காத்திருந்தேன். பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹஃப்ஸாவுடன் நிக்காஹ் செய்வதற்கான தூதுச் செய்தியை அனுப்பினார்கள். பிறகு அவரை அன்னாருக்கு நிக்காஹ் செய்து கொடுத்தேன்.

ஸீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது, ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுக்கு ஒரு மகள் இருந்தார்கள். அன்னாரது பெயர் ஹஸ்ரத் ஹஃப்ஸா பின்த் உமர் (ரலி) ஆகும். அன்னார் (ரலி) ஹுனைஸ் பின் ஹுஸைஃபா (ரலி) அவர்களுடன் திருமண பந்தத்தில் இருந்தார்கள். அன்னார் (ரலி) ஒரு தூய ஸஹாபியாக இருந்தார்கள். போரிலும் கலந்து கொண்டிருந்தார்கள். போருக்கு பிறகு மதீனா திரும்பியபோது நோய்வாய்ப்பட்டார். பிறகு அன்னார் உயிர்பிழைக்க முடியவில்லை. சிறிது காலத்திற்கு பிறகு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி)

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

அவர்களின் நிக்காஹ்வைக் குறித்த கவலை ஏற்பட்டது. அப்போது ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களின் வயது 20 அல்லது அதை விட அதிகமானதாக இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது எளிமையான இயல்பின் காரணமாக, அன்னார் (ரலி) சுயமே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை சந்தித்து, எனது மகள் ஹஃப்ஸா (ரலி) தற்போது விதவையாக இருக்கின்றார்; நீங்கள் விரும்பினால் அவர்களை திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஆனால், அதனை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மறுத்து விட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மௌனம் காத்தார்கள். எந்த பதிலும் கொடுக்கவில்லை. எனவே இதனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு மனவருத்தம் ஏற்பட்டது. அந்த மனவருத்தத்திலேயே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் சென்று நடந்த அனைத்தையும் கூறினார்கள். அதற்கு, அன்னார் (ஸல்) கூறினார்கள்:

உமரே! எதற்கும் கவலைப்பட வேண்டாம்; அல்லாஹ் நாடினால் ஹஃப்ஸாவிற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோரை விட சிறந்த கணவர் கிடைத்து விடுவார். மேலும், உஸ்மானிற்கும் ஹஃப்ஸாவை விட சிறந்த மனைவி கிடைத்து விடுவார். அன்னார் (ஸல்) இதனைக் கூற காரணம் என்னவாக இருந்தது என்றால், ஹஸ்ரத் ஹஃப்ஸாவை அன்னார் (ஸல்) திருமணம் செய்யவும், மேலும் தமது மகள் ஹஸ்ரத் உம்மே குல்ஸூமை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு நிக்காஹ் செய்து வைப்பதற்கும் எண்ணம் கொண்டிருந்தார்கள். இது பற்றி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகிய இருவரும் அறிந்திருநதார்கள். எனவே தான் அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அந்த ஆலோசனையை மறுத்திருந்தனர். அதற்கு சில காலத்திற்கு பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் தமது மகள் ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் (ரலி) அவர்களை ஹஸ்ரத் நபி(ஸல்) அவர்கள் திருமணம் செய்து வைத்தார்கள். அதன் பின்னர் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது தரப்பிலிருந்து தூதுச் செய்தியை அனுப்பினார்கள். இதை விட மேலானதாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு வேறு எது இருந்திருக்கும்? எனவே அன்னார் (ரலி) அந்த தூதுச் செய்தியை மிகவும் மகிழ்ச்சியுடன் உடனே ஒப்புக் கொண்டு விட்டார்கள். எனவே ஹிஜ்ரி 3-ம் வருடத்தில் ஷஃபான் மாதத்தில் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை திருமணம் செய்து நபியின் தூய துணைவியர்களில் இணைந்தார்கள். இந்த திருமணம் நடந்ததும், உங்கள் உள்ளத்தில் என்னைக் குறித்து ஏதேனும் மனவருத்தம் இருக்கக் கூடும்; விஷயம் என்னவென்றால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உள்ளத்தில் என்ன எண்ணம் கொண்டிருந்தார்கள்? என்பதை நான் அறிந்திருநதேன். எனினும், நான் அன்னாரின் அனுமதியின்றி அந்த இரகசியத்தை வெளிப்படுத்த முடியாது. ஒருவேளை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு இந்த எண்ணம் இல்லாதிருந்திருந்தால் நான் மிகவும் மகிழ்ச்சியுடன் ஹஸ்ரத் ஹஃப்ஸாவை திருமணம் முடித்திருப்பேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஹஸ்ரத் ஹஃப்ஸாவை திருமணம் முடிப்பதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், அன்னார் (ரலி) ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகளாக இருந்தார்கள். அன்னார் (ரலி) ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குப் பிறகு மற்ற அனைவரிலும் மிகச் சிறந்தவராக கருதப்பட்டு வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு மிகவும் நெருக்கமான ஒரு ஸஹாபியாக இருந்து வந்தார்கள். எனவே பரஸ்பர தொடர்புகளை மேலும் வலுப்படுத்தவும், மேலும் ஹுனைஸ் பின் ஹுஸைஃபா (ரலி) அவர்களின் எதிர்பாராத மரணத்தால் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) ஆகியோருக்கு ஏற்பட்ட துன்பத்தை அகற்றுவதற்கும் அன்னாரை திருமணம் செய்வதை சரியானதாக கருதினார்கள். மேலும், மற்றொரு பொதுவான காரணம் இதுவாக இருந்தது. அதாவது, பெண்கள் மனிதகுலத்தின் பகுதி ஆவர். இன்னும் கூறப்போனல் பல கோணங்களில் பகுதியை காட்டிலும் அதிகம் சிறந்த பங்களிப்பைக் கொண்டவர் ஆவர். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எவ்வளவு துணைவியர்கள் இருப்பார்களோ அந்த அளவிற்கு பெண்களிடத்தில் தப்லீஃக் மற்றும் தஃலீம் பணிகளை பரந்த அளவிற்கு செய்வதற்கு எளிதாக இருந்தது. மேலும் அழகாக அதனை செய்ய முடிந்ததும் ஒரு காரணமாக இருக்கும். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

திருமணத்தின்போது ஹஸ்ரத் ஹஃப்ஸா பின்த் உமர் (ரலி) அவர்களின் வயது 21 ஆக இருந்தது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு பிறகு ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் ஸஹாபிகளின் மகள்களில் மிகச் சிறந்த மகளாக இருந்தார்கள். மேலும், பரிசுத்தமான மனைவிமார்களில் அவர்களுக்கென்று ஒரு தனி அந்தஸ்து இருந்தது. மேலும், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடனும் அன்னாருக்கு நல்ல தொடர்பு இருந்தது. சில சிறு, சிறு விஷயங்களை தவிர, இதுபோன்ற உறவுகளில் அவ்வாறு நிகழ்வது உண்டு. அது தவிர அவர்கள் இருவரும் பரஸ்பரம் மிகுந்த அன்புடன் இருந்தார்கள். எழுதப் படிக்க அறிந்திருந்தார்கள். ஹதீஸில் இவ்வாறு சில அறிவிப்பு வருகின்றது: ஷிஃபாத் பின் அப்தில்லாஹ் அவர்களிடமிருந்து எழுதக் கற்றுக் கொண்டார்கள். அன்னாரின் மரணம் ஹிஜ்ரி 39-ம் ஆண்டில் நிகழ்ந்தது. அப்போது அன்னாருக்கு வயது சுமார் 63 ஆக இருந்தது.

அடுத்து, அந்தக் காலக்கட்டத்தில் தான் ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்களின் பிறப்பின் நிகழ்வும் நிகழ்ந்திருந்தது. ஹஸ்ரத் இமாம் ஹஸன் பின் அலி பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 3-ம் ஆண்டு ரமாலானின் நடுவில் பிறந்தார்கள். மூன்றாம் ஹிஜ்ரி ஆண்டின் ஷஃபான் மாதத்தில் பிறந்ததார்கள் என்றும் சிலர் கூறுகின்றனர். வேறு சிலரோ உஹது போருக்கு ஒரு வருடத்திற்கு பிறகு பிறந்தார்கள் என்றும், வேறு சிலரோ உஹது போருக்கு இரண்டு வருடம் கழித்து பிறந்தார்கள் என்றும் கூறுகின்றனர்.

இதில் முதலாவது கருத்து அதிக சரியானது என்று புகாரியின் விளக்கவுரை எழுதிய இமாம் அல்லாமா இப்னு ஹஜ்ர் அஸ்கலானீ கூறுகின்றார்கள். அன்னாருக்கு ஹர்ப் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் பெயர் வைத்திருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதை மாற்றி ஹஸன் என்று வைத்தார்கள். பிறந்த ஏழாம் நாளில் அன்னார் (ஸல்) ஹகீக்கா கொடுத்தார்கள். அன்னாரின் தலைமுடியை மழித்து அந்த முடியின் எடைக்கு நிகராக வெள்ளியை தருமம் செய்யுமாறு கட்டளையிட்டார்கள். உம்மே ஃபஸ்ல் (ரலி) அவர்கள் ஒரு முறை கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களுடைய உடலின் ஏதோ ஒரு உறுப்பு எனது வீட்டிலோ அல்லது எனது அறையிலோ இருப்பதாக நான் கனவில் கண்டேன்.

அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் அழகிய கனவைக் கண்டுள்ளீர்கள். ஃபாத்திமாவிற்கு ஒரு குழந்தை பிறக்கும்; நீங்கள் அதனை வளர்ப்பீர்கள்; மேலும் நீங்கள் அதற்கு பாலூட்டுவீர்கள்! (என்பது இதன் பொருளாகும்).

இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெரிய தந்தை ஹஸ்ரத் அப்பாஸ்(ரலி) அவர்களின் மனைவி ஆவார்கள். இவ்வாறு ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்களும் பிறந்தார்கள். மேலும் உம்மே ஃபஸ்ல் அவர்கள் ஹுஸம் என்ற குழந்தையுடன் சேர்த்து அவருக்கும் பாலூட்டினார்கள். ஹுஸம் என்ற குழந்தை அன்னாருடைய குழந்தையாக இருந்தது.

தங்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயம் (ஸல்) அவர்களின் சில விஷயங்கள் நினைவில் இருந்தால் கூறுங்கள் என்று ஹஸ்ரத் ஹஸன் பின் அலி (ரலி) அவர்களடத்தில் கேட்கப்பட்டது.

அதற்கு, எனக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு விஷயம் நினைவில் உள்ளது என்று அன்னார்(ரலி) கூறினார்கள். நான் ஒருமுறை ஸதகாவாக வந்திருந்த பேரீத்தம் பழங்களில் ஒரு பேரீத்தம் பழத்தில் வாய் வைத்து விட்டேன். அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது வாயிலிருந்து வெளியே எடுத்து விட்டார்கள். எனது உமிழ்நீரும் அதில் பட்டு விட்டது. அவ்வாறு இருப்பினும், அதனை எடுத்து ஸதகாவின் பேரீத்தம் பழங்களுடன் சேர்த்து வைத்து விட்டார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஒரு பேரீத்தம் பழம் தானே? என்று ஒருவர் கூறியபோது, எங்களுக்கு (அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குடும்பத்தினருக்கு) ஸதகா ஆகுமானது அல்ல என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களை விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஒப்புமை கொண்ட வேறு எவரும் இருக்கவில்லை. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்களை தமது முதுகில் ஏற்றி வைத்திருந்தார்கள். அதைப் பார்த்த ஒருவர், மகனே! நீர் எவ்வளவு சிறந்த சவாரியில் ஏறி அமர்ந்துள்ளீர்! என்று கூறினார். அதற்கு, சவாரியில் அமர்ந்திருப்பவரும் சிறந்தவர் தான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அன்னாருக்கு தமது பேரரின் மீது மிகுந்த பாசம் இருந்தது.

அடுத்து, ஹஸ்ரத் பராஃ (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கண்டேன். அப்போது, அன்னார் ஹஸ்ரத் ஹஸன் பின் அலி (ரலி) அவர்களை தமது முதுகில் அமர்த்தி இருந்தார்கள். மேலும், : அல்லாஹ்வே! நான் இவருடன் நட்பு கொண்டுள்ளேன்; நீயும் இவருடன் நட்பு பாராட்டுவாயாக! என்று அன்னார் (ஸல்) கூறிக் கொண்டிருந்தார்கள். சில அறிவிப்புகளில் இவ்வாறும் கூறப்பட்டுள்ளது: அதாவது, ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்களின் மரணம் விஷத்தின் காரணமாக நிகழ்ந்தது.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்களின் பிறப்புக் குறித்து இவ்வாறு கூறியுள்ளார்கள்:அதாவது அன்னார் (ரலி) ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் நிகழ்ந்த சம்பவங்களில் ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) ஆகியோருக்கிடையில் நிகழ்ந்த நிக்காஹ் பற்றிய சம்பவம் இடம்பெற்றிருந்தது. அவர்களுக்கு ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டு ரமலான் மாதத்தில், அதாவது நிக்காஹ் நிகழ்ந்து சுமார் பத்து மாதத்திற்கு பிறகு ஒரு குழந்தை பிறந்தது. அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸன் என்று பெயர் சூட்டினார்கள். இந்த ஹஸன் தான் பிற்காலத்தில் இமாம் ஹஸன் அலைஹி பிர்ரஹ்மா என்ற பெயரால் அழைக்கப்பட்டார்கள். ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் முகத்தோற்றத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் மிகவும் ஒப்புமை கொண்டவராக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தமது மகள் ஃபாத்திமாவின் மீது மிகுந்த அன்பு இருந்ததைப் போன்று ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களின் குழந்தைகள் மீதும் சிறப்பான அன்பு இருந்தது. இறைவா! எனக்கு இந்தக் குழந்தைகள் மீது அன்பு உள்ளது; நீயும் இவர்கள் மீது அன்பு கொள்வாயாக! மேலும் இவர்கள் மீது அன்பு செலுத்துவோர்கள் மீதும் அன்பு செலுத்துவாயாக! என்று பலமுறை அன்னார் (ஸல்) துஆ செய்து வந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையில் இருக்கும்போது ஹஸன் (ரலி) அவர்கள் பலமுறை அன்னாரை கட்டியணைத்துக் கொள்வார்கள். அன்னார் (ஸல்) ருகூவில் இருந்தால் அன்னாரின் பாதங்களுக்கு நடுவில் பாதை அமைத்து கடந்து செல்வார்கள். சிலமுறை ஸஹாபிகள் அவரை தடுத்தாலும், அவரை தடுக்க வேண்டாம் என்று அன்னார் (ஸல்) கூறிவிடுவார்கள். உண்மையில், அவர் அன்னாரை கட்டியணைத்துக் கொள்வதெல்லாம் தொழுகையில் அன்னாருடைய கவனத்தை சிதறடிக்கவில்லை. எனவே அவருடைய குழந்தைத்தனமான அன்பின் வெளிப்பாட்டில் தடையை ஏற்படுத்த விரும்பவில்லை. ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் தொடர்பாக ஒருமுறை கூறினார்கள்: என்னுடைய இந்தக் குழந்தை ஸய்யது அதாவது தலைவர் ஆவார். அதாவது அல்லாஹ் இவர் மூலமாக முஸ்லிம்களின் இரண்டு பிரிவினருக்கு மத்தியில் சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய நேரம் வரும் என்றார்கள். ஆக, தனது நேரத்தில் இந்த முன்னறிவிப்பு நிறைவேறியது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எனது பார்வையில் ஹஸ்ரத் ஹஸன் (ரலி) மிகச் சிறப்பாக செயல்பட்டார்கள். கிலாஃபத்தை விட்டு விலகி விட்டார்கள். ஏற்கனவே ஆயிரக்கணக்கானோரின் இரத்தம் சிந்தப்பட்டிருந்தது. மேலும் இரத்தம் சிந்தப்படுவதை அன்னார் (ரலி) விரும்பவில்லை. எனவே முஆவியா உடன் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். ஹஸன் (ரலி) அவர்களின் இந்த செயலினால் ஷியாக்களுக்கு இழப்பு ஏற்படுவதால் இமாம் ஹஸனை ஷியாக்கள் முழுமையாக ஏற்றுக் கொள்வதில்லை. நாம் இருவரையும் புகழ்கின்றோம். அதாவது ஹஸனையும், ஹுஸைனையும் புகழ்கின்றோம். அசல் விஷயம் என்னவென்றால், ஒவ்வொரு மனிதருக்கும் வெவ்வேறான ஆற்றல்கள் இருக்கின்றன. முஸ்லிம்களுக்கிடையில் உள்நாட்டுப் போர் உருவாகி அதனால் ஆயிரக்கணக்கானோர் இரத்தம் சிந்துவதை ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் விரும்பவில்லை. அன்னார் (ரலி) அமைதியை கருத்தில் கொண்டார்கள். ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் தீயவர் மற்றும் குழப்பவாதியிடம் பைஅத் செய்வதை விரும்பவில்லை. ஏனெனில், அதனால் மார்க்கத்தில் சீர்கேடு ஏற்பட்டு விடும் என்று அன்னார் (ரலி) கருதினார்கள். இருவரின் எண்ணமும் நன்மையானதாக இருந்தது.

إِنَّمَا الْأَعْمَالُ بِالنِّيَّاتِ

எண்ணங்களின் அடிப்படையில் செயல்கள் அமையும். இது அந்தக் குழந்தைளின் சம்பவம் ஆகும்.

நான் ஏற்கனவே பல குத்பாக்களில் பாலஸ்தீன மக்களுக்காக துஆவிற்கு கூறிவருகின்றேன். இன்றும் அது தொடர்பாக கூற விரும்புகின்றேன். தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். தற்போது அநீதி எல்லை மீறி சென்று கொண்டிருக்கின்றது. ஹமாஸுடன் போர் என்ற பெயரில் அப்பாவி குழந்தைகளும், பெண்களும், நோயாளிகளும் கொல்லப்பட்டு வருகின்றனர். இந்தப் பெயர் தாங்கி நாகரீகம் வாய்ந்த உலகமோ எல்லா வகையான போர் சட்டங்களையும், நிபந்தனைகளையும் முதுகுக்குப் பின்னால் எறிந்து விட்டது. அல்லாஹ் முஸ்லிம் நாடுகளுக்கு புரிதலை வழங்குவானாக!

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் 73,74 ஆண்டுகளுக்கு முன்பே முஸ்லிம்கள் நாடுகள் ஒன்று சேர வேண்டும் என்று எச்சரித்திருந்தார்கள். மேலும், அவர்கள் ஒன்று சேரவில்லையென்றால் பின்னர் ஒவ்வொருவராக மடிய விரும்புகின்றார்களா? அல்லது ஒன்றுபட்டு தங்களது ஒற்றுமையை நிலைநிறுத்தி எஞ்சியிருக்க விரும்புகின்றார்களா? என அவர்களே முடிவு எடுத்துக் கொள்ளட்டும்! என்று கூறியுள்ளார்கள்.

அந்தோ! தற்போது கூட இந்த மக்கள் இதனை புரிந்து ஒன்று சேர்ந்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

நிலைமை எப்படி இருக்கின்றது என்றால், என்னிடம் ஒருவர் கூறினார்: உம்ரா செய்பவர்களிடம் நீங்கள் அங்கு போய் பாலஸ்தீனம், இஸ்ரேல் போர் தொடர்பாக எதுவும் பேசக் கூடாது என்று கூறப்படுகின்றது.அங்குள்ள அரசாங்கம் விசா வழங்கும்போது இவ்வாறு வழிகாட்டுகின்றது.

இந்தத் தகவல் சரியென்றால் பின்னர் இது முஸ்லிம் அரசாங்கங்களின் பெரும் கோழைத்தனத்தின் வெளிப்பாடு ஆகும்.

எவ்வாறு இருப்பினும், உம்ராவின் இறைவணக்கத்திற்குரிய உரிமையையும் நிறைவேற்ற வேண்டும்; அதனிடையே எந்நிலையிலும் வேறெந்த விஷயமும் இருக்காது.

ஆனால் அதேநேரம் அநீதிக்குள்ளான பாலஸ்தீனியர்களுக்காக கண்டிப்பாக துஆ செய்ய வேண்டும். அவர்களையும் துஆவில் நினைவுகூர்ந்தால் நன்றாக இருக்கும். முஸ்லிம் அரசாங்கங்களும் குரல் கொடுக்கின்றன. ஆனால் இன்றைய நாட்களில் அவை மிகவும் பலவீனமான குரல்களாக இருக்கின்றன. சில குரல்கள் எழுந்தன. ஆனால், முஸ்லிம் அல்லாத நபர்கள் மற்றும் அரசியல் வாதிகள், அரசாங்கங்கள் இதை விட வலுவான குரல்களை எழுப்பியுள்ளனர்.

அல்லாஹ் முஸ்லிம்களுக்கும் துணிவையும், நுட்பமான ஞானத்தையும் வழங்குவானாக.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கூட நன்றாக பேசுகின்றார். இன்றைய நாட்களில் சிறப்பாக பேசுகின்றார். ஆனால் அவரது பேச்சிற்கு எந்த முக்கியத்துவமும் இல்லை என்றே தோன்றுகின்றது. இந்தப் போருக்கு பிறகு அல்லது இனியும் பரவிவிட்டால் இது மேலும் பரவிவிட்டால் அல்லது உலகப் போர் போன்ற ஒரு சூழலை உருவாகிவிட்டால் அதன் பிறகு ஐக்கிய நாடுகள் சபையின் நிலையும் முடிவுக்கு வந்து விடும் என்றும் தோன்றுகின்றது.

அல்லாஹ் உலகிற்கு அறிவை வழங்குவானாக. தற்போது உலகம் தனது அழிவை மிகவும் நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்று தோன்றுகின்றது. இந்த அழிவிற்கு பிறகு எந்த மக்கள் பாதுகாப்பாக இருப்பார்களோ அவர்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக. அவர்கள் இறைவனின் பக்கம் கவனம் செலுத்துவார்களாக. எவ்வாறு இருப்பினும் நாம் இது தொடர்பாக அதிகமாக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் உலகின் மீது கருணை புரிவானாக!

* * * * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த ***TOLL FREE*** எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது எழுத்துக்களிலும், வழிகாட்டல்களிலும் எண்ணற்ற இடங்களில் தமது வருகையின் நோக்கம் குறித்தும், இக்காலத்தில் ஒரு சீர்திருத்தவாதியின் வருகையின் அவசியத்தைக் குறித்தும் கூறியுள்ளார்கள்**

---

**உண்மையான விஷயம் என்னவென்றால், ஒருவருடைய நபித்துவ வாதத்தை பார்க்கும்போது அனைத்தையும் விட முதலில் காலத்தின் தேவை பார்க்கப்படுகின்றது. பிறகு முந்தைய நபிமார்கள் நிர்ணயித்த நேரத்தில் அவர் வந்துள்ளாரா? என்று பார்க்கப்படுகின்றது.பிறகு இறைவன் அவருக்கு உதவி செய்துள்ளானா? இல்லையா? என்று சிந்திக்கப்படுகின்றது. பிறகு எதிரிகள் செய்கின்ற ஆட்சேபனைகளுக்கு முழுமையான பதில் கொடுக்கப்பட்டுள்ளதா? என்றும் பார்க்க வேண்டும். இந்த அனைத்து விஷயங்களும் முழுமையானால் அந்த நபர் உண்மையாளர் என்று ஒப்புக் கொள்ளப்படும். இல்லையெனில் கிடையாது - (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை))**

---

**பாலஸ்தீனத்தின் அநீதியிழைக்கப்பட்ட மக்களுக்காக துஆ செய்வதற்கான அறிவுரை & மதிப்பிற்குரிய அப்துஸ் ஸலாம் ஸாஹிப், முஹம்மது காஸிம் கான் ஸாஹிப், அப்துல் கரீம் ஸாஹிப் போன்ற மர்ஹூம்களின் நற்குறிப்புகள்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 நவம்பர் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1402 ஆண்டு **நுபுவ்வத்** மாதம் **24ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது எழுத்துக்களிலும், வழிகாட்டல்களிலும் எண்ணற்ற இடங்களில் தமது வருகையின் நோக்கம் குறித்தும், இக்காலத்தில் ஒரு சீர்திருத்தவாதியின் வருகையின் அவசியத்தைக் குறித்தும் கூறியுள்ளார்கள். அல்லாஹ்வின் புறமிருந்து தான் தோன்றியிருப்பது பொருத்தமான நேரத்தில் காலத்தின் தேவைக்கேற்பவே ஆகும் என்பதையும், அல்லாஹ்வின் நடைமுறை மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்பவே என்பதையும் அன்னார் (அலை) நிரூபணம் செய்துள்ளார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: தற்போது நான் கூறியதற்கிணங்க சான்றை முழுமைப்படுத்துவதற்காக நான் வெளிப்படுத்த விரும்புவது என்னவென்றால் இறைவன் இக்காலத்தை இருளில் இருப்பதைக் கண்டு கவனமின்மை, நிராகரிப்பு, ஷிர்க் ஆகியவற்றில் மூழ்கியிருப்பதைக் கண்டு, நம்பிக்கை உண்மை, இறையச்சம் நேர்மை, போன்றவை வீணாகி போனதைக் கண்டு இறைவன் என்னை அனுப்பியுள்ளான். அதன் மூலமாக ஞானம். செயல், நல்லொழுக்கம் மற்றும் நம்பிக்கை ஆகியவை மீண்டும் உலகில் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதற்காகவும் தத்துவம், இயற்கையியல், அனைத்தையும் ஆகுமானதாகக் கருதக் கூடியக் கொள்கை,ஷிர்க், நாத்திகம் ஆகியவற்றின் ஆடையில் இந்த இறைத் தோற்றத்தில் ஏதேனும் பாதிப்பை ஏற்படுத்த விரும்புபவர்களின் தாக்குதல்களிலிருந்து இஸ்லாத்தைக் காப்பதற்காகவும் இறைவன் என்னை அனுப்பியுள்ளான். எனவே உண்மையைத் தேடுபவர்களே! நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். இஸ்லாத்திற்கு விண்ணின் உதவிகளுக்கு தேவையான காலமாக இது இல்லையா என்ன? பதிமூன்றாம் நூற்றாண்டாக இருந்த கடந்த நூற்றாண்டில் இஸ்லாத்திற்கு என்னென்ன துன்பங்கள் வந்தடைந்தன? என்பதும், இருள் பரவியதன் காரணமாக பொறுத்துக் கொள்ள முடியாத அளவிற்கு என்னென்ன காயங்கள் நமக்கு ஏற்பட்டன? என்பதும் இதுவரை உங்கள் மீது நிரூபிக்கப்படவில்லையா என்ன? அபாயங்கள் இஸ்லாத்தை முற்றுகையிட்டுள்ளன என்பது இதுவரை உங்களுக்கு புரியவில்லையா என்ன? எந்த அளவிற்கு மக்கள் இஸ்லாத்தை விட்டு வெளியேறி விட்டனர் என்றும், எந்த அளவிற்கு மக்கள் கிறிஸ்தவர்களுடன் இணைந்து விட்டனர் என்றும், எந்த அளவிற்கு மக்கள் நாத்திகர்களாகவும், பௌதீகவாதிகளாகவும் ஆகிவிட்டனர் என்றும், ஷிர்க் மற்றும் பித்அத் போன்றவை தவ்ஹீத் மற்றும் சுன்னத்தின் இடத்தை எந்த அளவிற்கு பிடித்து விட்டன என்றும் இஸ்லாத்தை மறுத்து எந்த அளவிற்கு நூல்கள் எழுதப்பட்டு உலகில் வெளியிடப்பட்டுள்ளன என்றும் செய்திகள் உங்களுக்கு இன்னும் கிடைத்திருக்கவில்லையா என்ன? எனவே தற்போது நீங்கள் சிந்தித்துக் கூறுங்கள். இந்த வெளிப்புற தாக்குதல்களை எதிர்கொள்ள இந்த நூற்றாண்டில் இறைவன் புறமிருந்து இத்தகைய நபர் அனுப்பப்படுவதன் அவசியம் தற்போது இல்லையா? என்று கூறுங்கள். அவசியம் இருக்கின்றதென்றால் நீங்கள் வேண்டுமென்றே இறையருளை மறுக்க வேண்டாம். இந்த நூற்றாண்டிற்கு பொருத்தமான முறையில் தோன்றுவதற்கு தேவையானவராக இருந்த அந்த நபரிமிருந்து நீங்கள் முகம் திருப்ப வேண்டாம். அந்த நபரைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆரம்பம் முதலே செய்தி கூறியிருக்கின்றார்கள். தோன்றக் கூடிய ஒரு நபரின் உண்மையின் தரத்தை குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நபரை உண்மையாளர் என்று ஏற்றுக் கொள்வதற்கு அவரைக் குறித்து வெளிப்படையான செய்தி ஏதேனும் ஒரு வானத்தின் நூலில் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. இந்த நிபந்தனை அவசியம் என்றால், பின்னர் எந்தவொரு நபியின் நபித்துவமும் நிரூபணமாகாது.

உண்மையான விஷயம் என்னவென்றால், ஒருவருடைய நபித்துவ வாதத்தை பார்க்கும்போது அனைத்தையும் விட காலத்தின் தேவை பார்க்கப்படுகின்றது. பிறகு முந்தைய நபிமார்கள் நிர்ணயித்த நேரத்தில் அவர் வந்துள்ளாரா? என்று பார்க்கப்படுகின்றது.பிறகு இறைவன் அவருக்கு உதவி செய்துள்ளானா? இல்லையா? என்று சிந்திக்கப்படுகின்றது. பிறகு எதிரிகள் செய்கின்ற ஆட்சேபனைகளுக்கு முழுமையான பதில் கொடுக்கப்பட்டுள்ளதா? என்றும் பார்க்க வேண்டும். இந்த அனைத்து விஷயங்களும் முழுமையானால் அந்த நபரை உண்மையாளர் என்று ஒப்புக் கொள்ள வேண்டும். இல்லையெனில் கிடையாது. தற்போது தெளிவாக தெரிவது என்னவென்றால் இஸ்லாமிய பிரிவினையை நீக்குவதற்காக வெளிப்புறத் தாக்குதல்களிலிருந்து இஸ்லாத்தை பாதுகாப்பதற்காக, காணாமல்போன ஆன்மிகத்தை உலகில் மீண்டும் நிலைநாட்டுவதற்காக சந்தேகத்திற்கு இடமின்றி வானத்தின் சீர்திருத்தவாதி ஒருவரின் தேவை இருக்கின்றது என்று காலம் தனது நிலையைக் குறித்து முறையிடுகின்றது. அந்த சீர்திருத்தவாதி நம்பிக்கை அளிக்கும் விதமாக மீண்டும் ஈமானிய வேர்களுக்கு நீர்பாய்ச்சுவார். இவ்வாறு தீமை மற்றும் பாவத்திலிருந்து வெளியேற்றி நன்மை மற்றும் நேர்மையின் பக்கம் கவனமூட்டுவார்.

ஆகவே நான் உரிய நேரத்தில் வந்திருப்பது எதை வெளிப்படுத்துகின்றது என்றால் கடுமையான மார்க்கப் பகைமை இருந்தாலே ஒழிய வேறு எந்த நபரும் இதனை மறுக்க மாட்டார் என்று நான் நம்புகின்றேன். இரண்டாவது நிபந்தனையாக பார்க்க வேண்டியது என்னவென்றால், (முந்தைய) நபிமார்கள் நிர்ணயித்த அந்த நேரத்தில் நான் வந்துள்ளேனோ? இல்லையா? என்பதாகும். இந்த நிபந்தனையும் எனது வருகையால் முழுமையடைந்து விட்டது. ஏனெனில், ஆறாயிரம் முடிவடையும்போது வாக்களிக்கப்பட்ட அந்த மஸீஹ் தோன்றுவார்

என்று நபிமார்கள் முன்னறிவிப்பு செய்துள்ளனர். சந்திரக் கணக்கின்படி, ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களின் தோற்றம் முதல் பார்க்கும்போது ஆறாயிரம் முடிவடைந்து விட்டது. சூரியக் கணக்கின்படி ஆறாயிரம் முடிவடையப் போகின்றது. இதுவும் நிறைவேறி விட்டது. மேலும் ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஒரு சீர்திருத்தவாதி தோன்றுவார்; அவர் மார்க்கத்தை புதுப்பிப்பார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இப்போது பதினான்காம் நூற்றாண்டின் 21 ஆண்டுகள் கழிந்து விட்டன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அப்போது கூறும்போது இருந்த விஷயங்கள் ஆகும் இவை. 21 ஆண்டுகள் கழிந்து விட்டன. தற்போது 22-ம் ஆண்டு கழிந்து கொண்டிருக்கின்றது. மார்க்க சீர்திருத்தவாதி தோன்றி விட்டார் என்பதற்கான அடையாளம் இல்லையா இது? அந்நியர்கள் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், நமது எதிரிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை ஒப்புக் கொண்டாலும், ஒப்புக் கொள்ளவில்லையென்றாலும் இஸ்லாத்தில் ஏதேனும் ஒரு மஹ்தி மற்றும் சீர்திருத்தவாதியின் தேவை உள்ளது; அவர் இஸ்லாம் என்ற கப்பலைத் தாங்கி பிடிக்க வேண்டும் என்று தற்போது இவர்களே கூக்குரலிட்டு கூறுகின்றனர். எல்லா இடங்களிலும் கூறப்படுகின்றது. ஆனால்,வரக் கூடியவர் இந்த முன்னறிவிப்பிற்கேற்ப வந்துவிட்டார்; காலத்தின் தேவைக்கேற்ப அவர் வந்துவிட்டார். ஆனால் அவரை ஏற்றுக் கொள்வதற்கு அவர்கள் தயாராக இல்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் வாதம் செய்ததது மட்டுமின்றி தமது உண்மைக்கு ஆதரவாக எண்ணற்ற அடையாளங்களை எடுத்து வைத்துள்ளார்கள். அவை அனைத்தையும் இங்கு எடுத்துக் கூறுவது சாத்தியமில்லைதான்.

அன்னார் (அலை) ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஒரு மாபெரும் முன்னறிவிப்பு உள்ளது.இன்றிலிருந்து 23 ஆண்டுகளுக்கு முன் பராஹீனே அஹ்மதிய்யாவில் இந்த முன்னறிவிப்பு இடம் பெற்றுள்ளது. அது என்னவென்றால், இந்த இயக்கத்தை அழிப்பதற்கு மக்கள் முயற்சி செய்வார்கள். மேலும் எல்லா வகையான சூழ்ச்சிகளையும் செய்வார்கள். ஆனால் நான் இந்த இயக்கத்தை அதிகரிக்கச் செய்வேன்;மேலும் முழுமைப்படுத்துவேன். இது ஒரு படையாக ஆகிவிடும். கியாமத் வரையிலும் இதன் வெற்றி தொடரும். மேலும் நான் உமது பெயரை பூமியின் எல்லைகள் வரை பிரபல்யம் அடையச் செய்வேன். கூட்டம் கூட்டமாக வெகு தொலைவிலிருந்து மக்கள் (உம்மிடத்தில்) வருவார்கள்; எல்லாப் புறமிருந்தும் பொருளாதார உதவிகள் வரும். இந்த ஆயத்தம் விண்ணில் நடந்து கொண்டிருக்கின்றது. எனவே (உமது) வீட்டை விரிவுபடுத்துவீராக.

இது எந்தக் காலத்தில் செய்யப்பட்ட முன்னறிவிப்பு ஆகும் என்று பாருங்கள்! இது தற்போது நிறைவேறுகிறது. இது இறைவனுடைய அடையாளம் ஆகும். கண் உள்ளவர்கள் இதனைப் பார்க்கின்றார்கள். ஆனால் எவர் குருடராக இருப்பாரோ அவரைப் பொருத்த வரை இப்போது வரை எந்த அடையாளமும் வெளிப்படவில்லை. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றம் ஒவ்வொரு வருடமும் லட்சக்கணக்கான எண்ணிக்கையில் ஜமாஅத்தில் மக்கள் இணைவது மற்றும் தியாகத்தில் முன்னேறுவது ஆகியவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உண்மைக்கான சான்றாகும். அன்னாருடைய தூதுச் செய்தி சென்றடையாத எந்தவொரு நாடும் தற்போது இல்லை. அங்கெல்லாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் தூதுச் செய்தியின் விளைவால் நல்ல ஆன்மாக்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் கவனம் ஏற்பட்டு அவர்கள் தற்போது இஸ்லாத்தை ஒப்புக் கொண்டுள்ளனர். இன்னும் கூறுவதாயின், சில இடங்களில் எப்படிப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என்றால் அல்லாஹ்வே மக்களுக்கு வழிகாட்டியுள்ளான். அவர்கள் ஜமாஅத்தில் இணைந்துள்ளனர். எதிரிகளின் எதிர்ப்புகள் இருந்தபோதிலும் ஜமாஅத்தினரின் ஈமானை அல்லாஹ் உறுதிபடுத்தியுள்ளான்.மேலும் உறுதியாக்கிக் கொண்டே செல்கின்றான். ஆகவே இன்றும் கூட அல்லாஹ்வின் உதவியின் காட்சிகளை நாம் காண்கிறோம். இது ஓர் அஹ்மதிக்கு அவருடைய ஈமானை வலுப்படுத்தக் கூடிய வழிமுறையாக இருக்கின்றது. சில மக்களின் சம்பவங்கள் இருக்கின்றன. அவற்றை நான் எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

பாபாயூ இஸ்லோபேக் ஸாஹிப் என்பவர் கிர்கிஸ்தானைச் சேர்ந்தவர் ஆவார். அவர் கூறுகின்றார்: நான் கிர்கிஸ்தானின் ஷகர் கிஷ்லாக்கைச் சேர்ந்தவன் ஆவேன். நான் கடிதம் எழுதியதற்கான காரணம் என்னவென்றால், ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களிடத்தில் பைஅத் செய்து நான் உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்திருக்கின்றேன். அஹ்மதிய்யத்தில் இணைந்ததற்கான காரணம் என்னவெனில், ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் இஸ்லாத்தின் அழகை மிகவும் சிறப்பான முறையில் எடுத்துக் கூறியுள்ளார்கள் என்பதாகும். இமாம் மஹ்தி (அலை) அவர்களால் மட்டுமே இஸ்லாத்தின் அழகுகளை இவ்வாறு எடுத்துக் கூறமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டு விட்டது. பிறகு அவர் கூறுகின்றார்: அல்லாஹ் என்னை இறையச்சம் கொண்டவனாக ஆக்குவதற்காகவும், பைஅத்தின் பத்து நிபந்தனைகளின்படி செயல்படக் கூடியவனாக என்னை ஆக்குவதற்காகவும் எனக்காக துஆ செய்யுங்கள். இது தொலை தூரப் பகுதியில் வசிக்கக் கூடிய ஒரு நபருடைய கூற்றாகும்.ஓரிடத்தில் மட்டுமின்றி எல்லா நாடுகளிலும் இதுபோன்ற நிலையை நம்மால் பார்க்க முடிகின்றது.

காங்கோவின் ஒரு மாநிலமான மணிமா உள்ளது. அங்கு ரோடிகா என்ற ஓரிடம் உள்ளது. அங்கு ஃபிரோஸ் மாஜிக் என்ற ஒரு கிறிஸ்தவ நண்பர் இருக்கின்றார். அவரிடம் ஜமாஅத்தினுடைய பிரசுரம் சென்றடைந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வருகை மற்றும் நம்முடைய ஜமாஅத்தில் இருக்கின்ற கிலாஃபத் அமைப்பைக் குறித்து அதில் கூறப்பட்டிருந்தது. அதை படித்த பிறகு அவரது நிலை மாறிவிட்டது. நான் இந்த இஸ்லாத்தைத் தான் தேடிக் கொண்டிருந்தேன் என்று அவர் கூறுகின்றார். மேலும், அவர் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்துவிட்டார். இதேபோன்று ஹுஸைன் ஸாஹிப் என்ற ஒரு நண்பரும் ஜமாஅத்தின் பிரசுரத்தைப் படித்து விட்டு பைஅத் செய்தது மட்டுமின்றி தப்லீஃக்கும் செய்ய ஆரம்பித்து விட்டார். அவருடைய தப்லீஃக்கின் விளைவால் தற்போது கிடைத்த அறிக்கையின் அடிப்படையில் அவர் ஐந்து நபர்களை அஹ்மதிய்யத்தில் இணைத்து விட்டார். இவ்வாறு மக்கள் தாங்கள் இணைவது மட்டுமின்றி அவர்கள் தப்லீஃக்கும் செய்கின்றனர்.மேலும் இது பழைய அஹ்மதிகள் சிந்திக்கத் தக்க விஷயம் ஆகும். அவர்களும் தப்லீஃக்கின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்து, தன்ஸானியாவில் ஷியாங்கா என்ற மாவட்டத்தில் மோங்காலாங்கா என்ற ஜமாஅத் உள்ளது. இந்த இடத்தில் அஹ்மதிய்யத் தோன்றியபோது, ஆரம்பத்தில் மரங்களின் நிழலின் கீழ் ஜமாஅத் உறுப்பினர்கள் தொழுகைகளை நிறைவேற்றி வந்தனர். அப்போது அங்கு முஹம்மது என்ற நபர் ஜமாஅத்தை மிகக் கடுமையாக எதிர்க்க ஆரம்பித்தார். மேலும் அஹ்மதிகள் முஸ்லிம்கள் கிடையாது; முஸ்லிம்களாகிய நாங்கள் வெகு விரைவில் ஒரு பள்ளிவாசலைக் கட்டுவோம் என்ற செய்தியை அவர் சில நபர்களுடன் சேர்ந்து பரப்பி விட்டார். பள்ளிவாசலுக்காக பணம் கொடுப்பதாக ஒரு வசதிபடைத்த பெண்மணியிடமிருந்து உத்திரவாதமும் பெற்றுவிட்டார். மறுபுறம், ரமலான் என்ற ஒரு தூய அஹ்மதி தமது நிலத்தை பள்ளிவாசலுக்காக அர்ப்பணித்தார். எதிர்ப்பு தெரிவித்த அந்த நபரோ, அந்த இடம் எப்படியாவது அஹ்மதியல்லாத முஸ்லிம்களுக்கு கிடைத்து விட வேண்டும் என்று எவ்வளவோ முயற்சி செய்தார். ஆனால், அந்த அஹ்மதியோ மிகவும் உறுதியாக இருந்தார். எந்த அளவுக்கு என்றால், ஜமாஅத்தினுடைய பள்ளிவாசல் கட்டுமானப் பணி ஆரம்பித்து முழுமையும் அடைந்து விட்டது. அந்தக் காலகட்டத்தில் எதிர்ப்பு தெரிவித்த அந்த நபருடைய வீடு வரை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தப்லீஃக்

## திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)




Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

சென்றடைந்து விட்டது. அவரோ எதிர்த்துக் கொண்டிருந்தார். ஆனால், அவருடைய வீடு வரை அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி சென்றடைந்து விட்டது. அவருடைய மனைவி, மக்களுக்கு அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்ளும் நற்பேறை அல்லாஹ் வழங்கினான். அவர் தனது எதிர்ப்பில் தனித்து விடப்பட்டார். அவருக்கு அறிவு இருக்கும் என்றால்; இவரைப் போன்ற பலரும் இருக்கின்றார்கள். அவர்களுக்கு இந்த அடையாளமே போதுமானதாகும். அதாவது எதிர்ப்பு இருந்தபோதிலும், அவருடைய மனைவி மக்களின் உள்ளத்தில் உண்மை இஸ்லாத்திற்காக அல்லாஹ் ஆர்வத்தை உருவாக்கினான். அவருடைய எ ந் த அ மு த் த மு ம் அ ங் கு செல்லுபடியாகவில்லை. இந்த ஈமானையும், மாற்றத்தையும் எந்தவொரு மனிதனாலும் உருவாக்க முடியாது. ஒருபோதும் உருவாக்க முடியாது. இது அல்லாஹ்வின் சிறப்பான அருளால்தான் உருவாகின்றது.

பிறகு ஈமான் உறுதியடைந்ததற்கும், அல்லாஹ்வின் உதவி கிடைத்ததற்கும் மற்றுமொரு சம்பவம் இருக்கின்றது. இது அர்ஜென்டைனில் நிகழ்ந்ததாகும். இது முற்றிலும் வேறு ஒரு பகுதியாகும். அமெரிக்காவிலுள்ள பகுதியாகும். ஒரு சம்பவம் ஆஃப்ரிக்காவில் நிகழ்ந்தது என்றால் மற்றொன்று ரஷ்யாவில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

அங்குள்ள மரியாளா ஸாஹிபா என்ற பெண்மணி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்.ஆனால், முஸ்லிம்களின் செயல்பாடுகளின் காரணமாக அவர் இஸ்லாத்தை விட்டு விலகிச் சென்று கொண்டிருந்தார். அதாவது அவர் அஹ்மதியாக இருக்கவில்லை. இஸ்லாத்தை ஒப்புக் கொண்டிருந்தார். அவருக்கு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் அறிமுகம் கிடைத்தபோது மிஷன் ஹவுஸிற்கு சென்று நம்முடைய அரபி மற்றும் இஸ்லாமிய வகுப்புகளில் பங்கெடுத்து வந்தார். சில மாதங்களுக்குப் பிறகு பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டார்.

அவர் கூறுகின்றார்: பைஅத் செய்து எனக்கு நிம்மதி கிடைத்தது. ஏனெனில், ஜமாஅத்தின் போதனை மற்றும் செயலில் நான் ஓர் ஒற்றுமையைக் கண்டேன். உண்மையான சகோதரத்துவ சூழலை நான் உணர்ந்தேன். இதில் ஒவ்வொருவருக்கும் தொண்டிற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. அவர் புதிதாக வரக் கூடியவராக இருந்தாலும் சரி; எவ்விதமான பாகுபாடும், வேறுபாடும் பார்க்கப்படுவதில்லை. அவருடைய மகள் முஸ்லிம் அல்லாதவர் ஆவார். சுன்னத் ஜமாஅத்தின் இஸ்லாமிய சென்டரில் மேல்நிலைப் பள்ளியில் படித்து வருகின்றார். அரேபியர்கள் அங்கு பணத்தை செலவிட்டுள்ளனர். அதில் அவர் படித்து வருகின்றார். பள்ளி நிர்வாகத்திற்கு அவரது தாயார் அஹ்மதிய்யா ஜமாத்தில் இணைந்தது தெரிய வந்தபோது, அந்த மாணவியின் மீது அழுத்தம் கொடுக்க ஆரம்பித்தது. மேலும் ஜமாஅத்திற்கு எதிராக பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தது. அஹ்மதிய்யத்தில் இணைந்த அந்தப் பெண்மணியின் மகள் ஸ்கூல் பிரோக்ஜெட்டிற்காக தன்னுடைய தனிப்பட்ட விருப்பத்தின் பெயரில் ஜமாஅத்தின் மிஷன் ஹவுஸிற்காக டெக்கரேஷன் பொருட்களையும் ஆயத்தம் செய்தது தொடர்பாக ஸ்கூல் நிர்வாகத்திற்கு தெரிய வந்தபோது அந்த மாணவியின் மீது அந்தப் பள்ளிக் கூடம் கடுமையாக கோபமுற்றது; மேலும், அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு ஆதரவாக இருந்தால் உங்களுக்கு பள்ளிக் கூடத்தில் கஷ்டங்களை எதிர் கொள்ள நேரிடும். நீயும் உமது தாயாரும் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இருந்து விலகி விடுங்கள் என்று கூறினர். இது குறித்து அந்த மாணவியின் தாயாருக்கு தெரிய வந்தபோது அவர் உடனடியாக எந்த தாமதமும் இன்றி தாமே தமது மகளை அந்த இஸ்லாமிய ஸ்கூலிலிருந்து மாற்றம் செய்து விட்டார். அவர் கூறுகின்றார்: தற்போது எனக்கும், எனது மகளுக்கும் நிம்மதி கிடைத்துள்ளது; ஏனெனில், எங்களுடைய மார்க்கத்தின் காரணமாக இனி எவரும் எங்களை தொந்தரவு செய்ய முடியாது. ஜமாஅத்தை உண்மை என்று கருதி நான் அதனை ஏற்றுக் கொண்டிருக்கின்றேன்; அவ்வாறிருக்கும்போது நான் ஏற்றுக் கொண்டதை அந்நியர்களுக்கு முன்பும் மகிழ்ச்சியுடனும், பெருமிதத்துடனும் வெளிப்படுத்துவேன். அது அவர்களுக்கு வெறுப்பாக இருந்தாலும் சரியே! இதுதான் அந்த மக்களிடத்தில் உருவான ஈமான் ஆகும்.

ரஷ்யாவின் புகாரா என்ற பகுதியில் சுல்தான் நவோச் ஸாஹிபா என்ற தூய அஹ்மதி ஒருவர் இருக்கின்றார். அவர் உஸ்பக்கிஸ்தானைச் சேர்ந்தவர் ஆவார். பணி நிமித்தமாக அவர் ரஷ்யாவில் இருக்கின்றார். அவர் கூறுகின்றார்; நான் தனி அஹ்மதியாக இருக்கின்றேன். எனது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் போதனைகளை அறிமுகம் செய்து கொண்டே இருப்பேன். எனது மனைவி மக்களும் அஹ்மதிகளாக ஆகிவிட வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு இருக்கின்றது. அல்லாஹ் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் ஒளியால் அவர்களையும் ஒளிமிக்கவர்களாக ஆக்க வேண்டும் என்று நான் அதிகமாக துஆ செய்து வருகின்றேன். நான் கனவு ஒன்றைக் கண்டேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எனது கனவில் வந்தார்கள். மேலும் எனது நெஞ்சில் தலை வைத்து தொடர்ச்சியாக சூரா இக்லாஸை ஓதிக் கொண்டிருந்தார்கள். அதன் மூலமாக எனக்கு மிகவும் மனநிம்மதி கிடைத்தது. அதேபோன்று நான் சொர்க்கத்தில் எனது மனைவி மக்களுடன் இருப்பதாகவும் கனவில் கண்டேன். அங்கு நான் ஹஸ்ரத் மூஸா (அலை) மற்றும் ஹஸ்ரத் ஈஸா (அலை) ஆகியோரையும் கண்டேன். இந்த கனவில் இருந்து நான் விளங்கிக் கொண்டது என்னவென்றால் சொர்க்கம் என்பது அஹ்மதிய்யத் ஆகும். அதனுடைய போதனை சொர்க்கத்தைப் போன்றதாக உள்ளது. அல்லாஹ் தனது அருளினால் எனது மனைவி மக்களையும் திருப்பி கொண்டு வருவான் என்று நான் நம்புகின்றேன். நான் இந்தக் கனவைக் கண்டு சில நாட்கள் தான் கழிந்திருக்கும். எனது 19 வயது மகனான தியார் பேக்கின் உள்ளத்தை அல்லாஹ் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்திற்காக திறந்து விட்டான். அவர் பைஅத் செய்து விட்டார். அது எனக்கு மிகவும் மகிழ்ச்சிகரமான நாளாக இருந்தது. அதனை சொற்களில் விவரிப்பது சாத்தியமற்றதாகும். இவ்வாறே அல்லாஹ் எனது மனைவியின் உள்ளத்தையும் திறப்பானாக. இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் மடியில் அல்லாஹ் அவரையும் கொண்டு வருவானாக.

இது இந்த மக்களுடைய உத்வேகமும், ஆர்வமும் ஆகும்.

யூ.கேவைச் சேர்ந்த புதிதாக பைஅத் செய்த பெண்மணி ஒருவர் கூறுகின்றார்: நான் முஸ்லிம் குடும்ப பின்னணியைக் கொண்டவர் ஆவேன். சுன்னத் ஜமாஅத்தை மிகக் கடுமையாக விரும்பக் கூடிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணி ஆவேன். சுன்னத் ஜமாஅத்துதான் உண்மையான இஸ்லாம் ஆகும் என்று எங்களுக்கு கூறப்பட்டிருந்தது. ஒருநாள் நான் எனது பல்கலைக்கழகத்திற்கு அருகில் மஸ்ஜித் நாஸிரில் பாங்கோசை கேட்டபோது நான் வீட்டிற்கு வந்து மிகவும் மகிழ்ச்சியுடன், பல்கலைக்கழகத்திற்கு அருகில் ஒரு மஸ்ஜித் இருக்கின்றது என்று கூறினேன். அதைப் பற்றி ஆய்வு செய்தபோது, இது அஹ்மதிகளுடைய பள்ளிவாசல் ஆகும்; இந்தப் பள்ளிவாசல் காதியானிகளுடைய பள்ளிவாசல் ஆகும்; அவர்கள் கத்மே நுபுவத்தின் மீது நம்பிக்கை கொள்வது கிடையாது; அவர்கள் தமக்கென்று ஒரு நபியை உருவாக்கி வைத்துள்ளார்கள் என்பது போன்ற பல்வேறு விஷயங்களை கூறி, நீ அந்தப் பள்ளிவாசலை விட்டு விலகியிருக்க வேண்டும் என்று எனது தந்தை கூறிவிட்டார்கள். அங்கு செல்வதற்கு கடுமையாக தடுத்து விட்டார்கள். அந்தப் பெண்மணி கூறுகின்றார்: ஆரம்பத்தில் நான் அவர்களின் கூற்றை ஏற்றுக் கொண்டு விட்டேன்; ஆனால் அதனை எனது உள்ளம் ஏற்கவில்லை. அஹ்மதிகளைக் குறித்து இன்னும் ஆய்வு செய்ய வேண்டும் என்று எனக்கு தோன்றியது. மற்றொரு புறம், குடும்பத்தினர்களைப் பற்றிய அச்சமும் இருந்தது; நான் பிடிக்கப்பட்டு விடக் கூடாது; அவர்கள் கோபமடைந்து விடக் கூடாது என்று நான் அஞ்சினேன். பல்கலைக்கழகத்தில் நான் அஹ்மதி மாணவர்களையும் சந்தித்தேன். இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத் தொடர்பாக விரிவாக அவர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ந்தது. சுன்னத் ஜமாஅத்துதான் அசல் இஸ்லாம் ஆகும் என்பதை அவர்களிடம் நிரூபணம் செய்வதற்கு நான் முயன்றேன். ஆனால் இதுபோன்ற கலந்துரையாடலால் அஹ்மதிய்யத்தைக் குறித்து ஆய்வு செய்யக் கூடிய ஆர்வம் மேலும் அதிகரித்தது. பிறகு, அஹ்மதிய்யா ஜமாஅத்தினுடைய வலைதளத்தைக் குறித்து எனக்கு தெரிய வந்தது. அங்கு பல வீடியோக்களை நான் கண்டேன்; பல விஷயங்களை நான் படித்தேன். இஸ்லாத்தைக் குறித்து எனக்கு சில கேள்விகள் இருந்தன. அதற்கு எங்குமே திருப்தியளிக்கும் பதில்கள் எனக்கு கிடைக்காமல் இருந்தன. ஆனால், அஹ்மதிய்யா ஜமாத்தின் நூல்களை நான் படித்தபோது எனது கேள்விகளுக்கு பதில் கிடைக்க ஆரம்பித்து விட்டது.

தற்போது அஹ்மதி இளைஞர்களும் சிந்திக்க வேண்டும். அவர்கள் சரியான முறையில் அறிவை பெறுவதற்கு முயற்சி செய்தால் அந்நியர்களின் தாக்கத்திற்குள்ளாகுவதற்கு பகரமாக அவர்களுக்கு பதில்கள் கிடைத்து விடும். சில இளைஞர்கள் தாக்கத்திற்கு ஆளாகின்றார்கள் தான்.

அந்தப் பெண்மணி கூறுகின்றார்: அல்லாஹ் எனக்கு ஏதேனும் அடையாளத்தைக் காட்ட வேண்டும் என்றும் நான் துஆக்கள் செய்ய ஆரம்பித்து விட்டேன்.

நேர்வழியின் பக்கம் வருவதற்கு, உண்மையை தேடுவதற்கு இதுவும் மிகச் சிறந்த வழிமுறையாகும். அது பழைய அஹ்மதியாக இருந்தாலும் சரி; அல்லது புதிய அஹ்மதியாக இருந்தாலும் சரி! எங்களுடைய ஈமான் உறுதியாக வேண்டும்; எங்களுக்கு ஏதேனும் அடையாளத்தை வழங்குவாயாக. எங்களுக்கு நேர்வழி வழங்குவாயாக என்று

அல்லாஹ்விடத்தில் துஆ கேட்க வேண்டும்.

எவ்வாறு இருப்பினும் அந்தப் பெண்மணி கூறுகின்றார்: நான் அந்தக் காலகட்டத்தில் பல கனவுகளைக் கண்டேன். ஒரு கனவில் நான் ஒரு நதியின் கரையோரத்தில் இருக்கின்றேன். மற்றொரு கரையில் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஒரு ஹாலிற்கு வருகின்றார்கள். நதியைக் கடந்து நதியின் மற்றொரு கரைக்கு நான் செல்ல விரும்புகின்றேன். ஆனால், நதியின் நீரோட்டம் வேகமாக இருக்கின்றது. அதைக் கண்ட ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள், இறைவன் தன் அடியாரை ஒருபோதும் தனியாக விட மாட்டான் என்று கூறுகின்றார்கள். அப்போது அந்த நதி மறைந்து விட்டது.நான் நதியின் அடுத்த கரையை அடைந்து விட்டேன்.மற்றொரு கரையில் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஒரு ஹாலிற்கு வருகின்றார்கள். நதியைக் கடந்து நதியின் மற்றொரு கரைக்கு நான் செல்ல விரும்புகின்றேன். ஆனால், நதியின் நீரோட்டம் வேகமாக இருக்கின்றது. அதைக் கண்ட ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள், இறைவன் தன் அடியாரை ஒருபோதும் தனியாக விட மாட்டான் என்று கூறுகின்றார்கள். அப்போது அந்த நதி மறைந்து விட்டது.நான் நதியின் அடுத்த கரையை அடைந்து விட்டேன்.

அதேபோன்று அந்தப் பெண்மணி மற்றொரு கனவில் என்னையும் கண்டுள்ளார். எவ்வாறான சூழலில் கண்டுள்ளார் என்றால், அதைக் கண்டு விட்டு அவர் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியிருக்கின்றார். மற்றொரு கனவைக் குறித்து அவர் கூறுகின்றார்:

நான் எனது தந்தை வழிப் பாட்டியையும் கனவில் கண்டேன்; இஸ்லாமாபாதிற்கு செல்லும்போது என்னையும் நினைவில் வைத்துக் கொள் என்று அவர் என்னிடம் கனவில் கூறுகின்றார். இந்த அனைத்து கனவுகளும் எனக்கு தெளிவான அடையாளங்களாக இருந்தன. ஆகவே நான் பைஅத் செய்து விட்டேன்.

இவ்வாறு கையைப் பிடித்து அஹ்மதிய்யத்தின் பக்கம் அழைத்து வருவது உள்ளத்தில் ஈமானை உறுதிப்படுத்துவது போன்றவை அல்லாஹ்வின் உதவிக்கான அடையாளம் இல்லையென்றால் பிறகு வேறு என்ன?

அடுத்து, ஆஃப்ரிக்காவில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைப் பாருங்கள்! ஒரு கிராமத்தில் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதற்கு அல்லாஹ் ஒருவருக்கு நல்வாய்ப்பை வழங்கிய பிறகு அவருடைய ஈமானில் எவ்வாறு அவன் உறுதியை ஏற்படுத்துகின்றான் என்பது பற்றிய ஒரு சம்பவம் ஆகும்.

புர்கினாஃபோஸோவில் டோரீ மண்டலத்தில் டாக்கா எனும் ஜமாஅத்தில் ஜாபிர் ஸாஹிப் என்ற ஓர் அஹ்மதி இருக்கின்றார். அவர் வயல்வெளியில் வேலைப் பார்த்துக் கொண்டிருந்தபோது தீவிரவாதிகள் அவரைப் பிடித்துக் கொண்டனர். நேற்று நாங்கள் மஹ்தியாபாதில் அஹ்மதிகளைக் கொன்றது போன்று உம்மையும் கொன்று விடுவோம் என்று அவர்கள் கூறினர். பிறகு அவரது மொபைல் ஃபோனையும் பறித்து அதனை அவர்கள் பரிசோதித்துப் பார்த்தபோது, அதில் ஜமாஅத்தினுடைய முபல்லிஃக்குகளின் சொற்பொழிவுகளைக் கேட்டனர். சொற்பொழிவுகளைக் கேட்ட பிறகு அவர்கள் கூறினர்: நாங்கள் இவர்களையும் தேடிக் கொண்டிருக்கின்றோம்; ஏனெனில், இவர்கள் வானொலியில் அஹ்மதிய்யத்தைக் குறித்து பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

அந்த அஹ்மதியிடம் அவருடைய தந்தையின் முகவரியை கேட்டறிந்து நாளை நாங்கள் உங்களுடைய கிராமத்திற்கு வருவோம் என்று கூறிவிட்டுச் சென்றனர். ஜாபிர் ஸாஹிப் அவர்கள் தமது தந்தை மற்றும் குடும்பத்தினரை அழைத்துக் கொண்டு இரவோடு இரவாக டோரீ என்ற இடத்தில் அமைந்துள்ள அஹ்மதிகளின் குடியிருப்பான முஹம்மதாபாதிற்கு சென்று விட்டார். அந்த அஹ்மதி தமது வீட்டையும், அனைத்து பொருட்களையும் விட்டு விட்டுச் சென்று விட்டார். அடுத்த நாள் அந்த தீவிரவாதிகள் அந்த கிராமத்திற்கு சென்றனர். பின்னர் ஒரு நபரைப் பிடித்து அவரிடமிருந்து வலுக்கட்டாயமாக அந்த முகவரியைக் கேட்டு தெரிந்து கொண்டனர். பிறகு அங்கு சென்று அவரைத் தேடிப் பார்த்தனர். மேலும், வீட்டில் இருந்த பொருட்களை எல்லாம் வெளியே வீசிவிட்டனர். மேலும், இங்கு யார் அஹ்மதியாக இருந்தாலும் நாங்கள் அவரைக் கொன்று விடுவோம் என்று கூறினர். எவ்வாறு இருப்பினும் அந்த அஹ்மதி அங்கிருந்து வந்து விட்டார். தற்போது ஜமாஅத் ஏற்பாட்டில் கீழ் முஹம்மதாபாதில் இருக்கின்றார்.

புர்கினாஃபோஸோவின் ஷஹீதுகள் தமது உயிர்களை கொடுத்து அங்குள்ள அஹ்மதிகளின் ஈமானை பலவீனமாக்கவில்லை. மாறாக, ஒவ்வொரு நாளும் அவர்களின் ஈமானில் உறுதி ஏற்பட்டுக் கொண்டே செல்கின்றது. இந்த ஏழை மக்களும் தங்களது சிறிதளவிலான பொருட்களையும், தாங்கள் சார்ந்திருந்த வாழ்வாதாரத்திற்கான பொருட்களையும் விட்டு விட்டார்கள். ஆனால், ஈமானை விட்டு விடவில்லை. இந்த மக்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டு சில ஆண்டுகள் தான் ஆகின்றன. எனினும், ஈமானில் முன்னேறிக் கொண்டே செல்கின்றனர். இவ்வாறு அவர்களது ஈமானில் உறுதிபாட்டை ஏற்படுத்துவது அல்லாஹ் இல்லையென்றால் வேறு யார்? ஒரு புறம் அஹ்மதிய்யத்திற்கு எதிர்ப்பு இருந்தபோதிலும், ஈமானில் உறுதித் தன்மை ஏற்படக் கூடிய காட்சியை நாம் காண்கின்றோம். மற்றொரு புறம், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை ஒப்புக் கொள்வதற்காக மக்களின் உள்ளங்களை அல்லாஹ் அதிகமாக திறப்பதையும் நாம் காண்கின்றோம். இது அதற்குரிய நேரமாகும்; தேடுங்கள்; அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்வான் என்று அன்னார் (அலை) கூறியுள்ளார்கள்.

அடுத்து, சென்டர் ஆஃப்ரிக்காவில் எழுகே என்ற ஓர் இடம் உள்ளது. அங்குள்ள முஅல்லிம் ஸாஹிப் கூறுகின்றார்: நாங்கள் தப்லீஃக்கிற்காக சென்றோம். 150 ஆண்கள் மற்றும் பெண்கள் பிரச்சாரத்தைக் கேட்பதற்காக ஒன்று கூடி விட்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வருகையின் அடையாளங்களைக் குறித்து நான் அவர்களுக்கு கூறினேன். அதன் பிறகு கேள்வி பதில் நிகழ்ச்சி நடைபெற்றது. அங்குள்ள சென்டரல் இமாம் தான்ஸா உமர் ஸாஹிப் அவர்கள் பேசுவதற்கு அனுமதி கேட்டார்கள். அவர் தனது பேச்சை ஆரம்பிக்கும்போது,

جَآءَ الْحَقُّ وَزَهَقَ الْبَاطِلُ اِنَّ الْبَاطِلَ كَانَ زَهُوْقًا

என்ற வசனத்தை ஓதி ஆரம்பித்தார்.அதாவது உண்மை வந்து விட்டது; பொய் ஓடிவிட்டது. நிச்சயமாக பொய் ஓடி விடக் கூடிய ஒன்றே ஆகும்.

அதன் பிறகு அவர் கூறினார்: நீங்கள் கூறிய இந்த தூதுச் செய்தியை நாங்கள் கேட்டதும் கிடையாது; இதற்கு முன்னர் ஆய்வு செய்ததும் கிடையாது.அல்ஹம்துலில்லாஹ். இன்று எங்கள் கிராமத்திற்கு உண்மை வந்து விட்டது. இமாம் மஹ்தி தோன்றினால் உடனடியாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இன்று நானும், எனத நாற்பது தோழர்களும் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைகின்றோம்; இந்த உண்மையில் நிலைத்திருக்கக் கூடிய நற்பேறை அல்லாஹ் எங்களுக்கு வழங்குவானாக! என்றும் அன்னார் கூறினார்கள்.

ஆக, இவ்வாறு மக்கள் ஜமாஅத்தில் இணைந்து கொண்டே செல்கின்றனர். பிறகு எதிர்க்கின்ற மக்களையும் அல்லாஹ் ஜமாஅத்தின் பக்கம் எவ்வாறு இழுத்துக் கொண்டு வருகின்றான்? என்பது தொடர்பான ஒரு சம்பவம் உள்ளது. எண்ணற்ற சம்பவங்கள் உள்ளன.

மாலியின் கவ்ரோ என்ற ஒரு மண்டலம் உள்ளது. அங்கு நம்னா என்ற ஓரிடம் உள்ளது. கூறுகின்றார்கள்: அங்கு இவ்வருடம் ஜமாஅத்தின் சார்பாக அவர்களின் மண்டல மாநாட்டை நடத்தக் கூடிய வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்தது. அதற்கு முன்பு அது பற்றி ரேடியோவில் அறிவிப்பு செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. அந்தக் கிராமம் வெகு தொலைவில் இருப்பதன் காரணத்தினால் ரேடியோ சில நேரம் கேட்கும்; சிலநேரம் கேட்பதில்லை. ஆனால், அந்நாட்களில் ரேடியோவின் நிகழ்ச்சிகள் கேட்டன. இந்த செய்தியைக் கேட்ட ஸித்தீக் ஸராஹ் என்ற ஒரு நண்பர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்று எண்ணம் கொண்டார். அவருடன் அவருடைய மற்றொரு நபரும் இருந்தார். அவர் அஹ்மதிய்யத்தின் போதனைகளைக் கேட்கக் கூடாது என்று கூறிக் கொண்டிருந்தார். அஹ்மதிய்யத்தின் பேச்சைக் கேட்க வேண்டாம்; இவர்கள் காஃபிர்கள் ஆவர் என்று அவர் கூறிக் கொண்டிருந்தார்.

எவ்வாறு இருப்பினும் அவருடைய பிடிவாதத்தின் காரணமாக இந்த இரு நண்பர்களும் மாநாட்டிற்கு வந்து விட்டனர். 80 கி.மீ தொலைவை கஷ்டப்பட்டு கடந்து வந்தனர். அங்கு முறையான சாலைகளே கிடையாது. விசாரித்து, விசாரித்து மாநாட்டிற்கு இரு நாட்களுக்கு முன்னரே அங்கு சென்றடைந்து விட்டனர். உள்ளூர் தலைவரும், ஜமாஅத்தினரும் அவர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்தனர். மாநாட்டிற்கு முன்னரே அவர்களுக்கு அஹ்மதிய்யத்தைக் குறித்த அறிமுகம் ஏற்பட்டு விட்டது. மாநாட்டில் அவர்கள் சொற்பொழிவுகளைக் கேட்டனர். ஜமாஅத்தாக அவர்கள் தஹஜ்ஜூத் தொழுதனர். ஜமாஅத் மக்களிடத்தல் இருக்கின்ற பரஸ்பர நேசம் மற்றும் களங்கமற்றத் தன்மை ஆகியவற்றை கண்டு மிகுந்த தாக்கமடைந்தனர். மாநாட்டின் இறுதி நாளில் விருந்தினர் என்ற முறையில் தம்முடைய கருத்தை எடுத்துக் கூறுவதற்கு அவர் அழைக்கப்பட்டபோது, அவர் இந்த அனைத்து விஷயங்களையும் எடுத்துக் கூறி அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதாக அறிவித்து விட்டார். அவர் பேசி முடித்த உடனேயே அவரது நண்பர் பேசும்போது கூறினார்: உண்மை என்னவென்றால், எனது நண்பரை தப்பெண்ணத்தில்

ஆழ்த்துவதற்காகத்தான் நான் வந்தேன். ஆனால், தற்போது நானே அஹ்மதியாகிவிட்டேன் என்று கூறி அவரும் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டு விட்டார்.

கான்கோபிராஸ்வில் இதுவும் ஒரு ஆஃப்ரிக்க நாடாகும். அங்கு உயர்நிலைப் பள்ளியில் எஃப் ஏ படிப்பை முழுமை செய்த ஓர் இளைஞர் இருக்கின்றார். அவர் ஒரு கிராமத்தில் கத்தோலிக்க மிஷனரியிடம் இருந்து கிறிஸ்தவக் கல்வியைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார். அதன் பிறகு மிஷனரியுடைய கல்வியை முழுமை செய்த பிறகு தேவாலயத்தின் மூலமாகவே யுனிவர்சிட்டிக்கு செல்ல இருந்தார். அந்தக் காலகட்டத்தில் அவருக்கு நம்முடைய உள்ளூர் முபல்லிஃக் உடன் தொடர்பு ஏற்பட்டது. உள்ளூர் முபல்லிஃக் அவருக்கு தப்லீஃக் செய்ய ஆரம்பித்தார். அஹ்திய்யா ஜமாஅத்தின் சான்றுகளுக்கு அந்த இளைஞரிடத்திலும் எந்த பதிலும் இல்லை. அவருடைய ஆசிரியராக இருந்த அந்த மிஷனரியிடமும் எந்த பதிலும் இல்லை. இதைக் கண்ட அந்த இளைஞர் கிறிஸ்தவ மிஷனரியாக ஆகுவதற்கு பகரமாக பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்து விட்டார். தற்போது அவர் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பவராக மாறி அஹ்மதிய்யத்தை பிரச்சாரம் செய்து வருகின்றார்.

செனிகாலில் தாமோகொண்டா என்ற ஒரு பகுதியில் தப்லீஃக் நிகழ்ச்சிக்காக திட்டமிடப்பட்டது. அங்கு சில வருடத்திற்கு முன்பு ஒருவர் தமது மனைவி மக்களுடன் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டிருந்தார். ஆனால், அந்தக் கிராமவாசிகள் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இந்த வருடம் அந்தக் கிராமத்தின் சீஃப் மற்றும் இமாமை மீண்டும், மீண்டும் சந்தித்து தப்லீஃக் நிகழ்ச்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சுற்றுப் புறத்தில் இருந்த கிராமங்களின் சீஃப் மற்றும் இமாம்களுக்கும் அழைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. இஸ்லாத்தினுடைய தற்போதைய சூழலில் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையின் அவசியம் குறித்தும், இந்தக் காலத்தில் இஸ்லாத்தின் முன்னேற்றத்தில் அஹ்மதிய்யத்தின் பங்களிப்புக் குறித்தும் முஅல்லிம்கள் சொற்பொழிவாற்றினர். அதன் பிறகு கேள்வி பதில் நிகழ்ச்சி நடைபெற்றது. அஹ்மதிய்யத்தின் பெயரை அண்டை நாடானா கேம்பியாவில் நாங்கள் கேள்விப்பட்டிருந்தோம். ஆனால், அஹ்மதிய்யத்தின் கொள்கைகள் குறித்து நாங்கள் அறியாமல் இருந்தோம் என்று பக்கத்து கிராமத்தில் இருந்து வந்திருந்த மக்கள் கூறினர்.

ஆனால், தற்போது அஹ்மதிய்யத்தின் கொள்கைகளைக் குறித்து விளக்கமாக கேட்டறிந்த பிறகு எவ்வித கேள்வியும் இன்றி நாங்கள் அஹ்மதிய்யத்தில் இணைவதாக அவர்கள் அறிவிப்பு செய்து விட்டனர். அதன் பிறகு அந்த ஊரின் இமாம் எழுந்து நின்று அஹ்மதிய்யத்தின் உண்மையைக் குறித்து அறிவிப்பு செய்தார். அந்தக் கிராமத்தின் சீஃப் தமது குடும்பத்துடன் அஹ்மதிய்யத்தில் இணைவதாக அறிவிப்பு செய்தார். கலந்து கொண்டவர்களில் எவருக்காவது ஏதேனும் சந்தேகம் இருந்தால் அவர் இங்கு கூறட்டும்; பிறகு எவ்வித சாக்குப்போக்கும் எடுபடாது என்று கூறப்பட்டபோது கலந்து கொண்ட அனைவரும் தமது குடும்பத்தினருடன் அஹ்மதிய்யத்தில் இணைவதாக அறிவிப்பு செய்தனர்.

ரஷ்யன் ஸ்டேஸ் நாடான உஸ்பகிஸ்தானில் முஸ்லிமோ மன்ஸூர் ஸாஹிப் என்ற ஒரு புதிய அஹ்மதி இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: நான் முதலில் இமாம் அபூ ஹனீஃபா அவர்களின் கொள்கையை பின்பற்றக் கூடியவனாக இருந்தேன். ஒருநாள் என்னுடைய நண்பர் என்னை அரபிக் கற்றுக் கொள்வதற்காக ஓர் அஹ்மதி ஆசிரியரிடம் அழைத்துச் சென்றார். நான் அந்த ஆசிரியரிடம் அரபிக் கற்றுக் கொண்டதுடன் இஸ்லாத்தைக் குறித்தும் கேள்விக் கேட்க ஆரம்பித்தேன். எந்த அளவிற்கு நல்ல பதில்கள் எனக்கு கிடைத்து வந்தன என்றால் அதனால் எனது உள்ளம் நிம்மதியடைந்து வந்தது.

உண்மையான பதில்களை பெற விரும்பினால், உள்ளத்தை தொடக் கூடிய தத்துவ ரீதியிலான உண்மையான பதில்களை பெற விரும்பினால், அவை அஹ்மதிய்யா ஜமாஅத்தைத் தவிர வேறு எங்கும் கிடைக்க முடியாது. ஏனெனில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நமக்கு அந்த பதில்களை வழங்கியுள்ளார்கள். அதற்கு விளக்கமளித்துள்ளார்கள்.

அவர் கூறுகின்றார்: இந்த பதில்களுக்கான உண்மையான ஊற்று எங்கு உள்ளது? உண்மையான பதில்கள் எங்கு இருந்து கிடைக்கின்றன? என்று நான் அந்த ஆசிரியரிடம் கேட்டபோது, அவர் எங்களுக்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தைக் குறித்து அறிமுகம் செய்து வைத்தார். எங்களுடைய உள்ளம் ஏற்கனவே திருப்தியடைந்து இருந்தது. எனவே நான் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டேன். அல்லாஹ் தன்னை இந்த வழியில் உறுதியாக நிலைபெறச் செய்வதற்காக தமக்காக துஆ செய்யுங்கள் என்று அவர் கூறியுள்ளார். மக்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உண்மையை அல்லாஹ் நிரூபிப்பது மட்டுமின்றி அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் இருக்கும் தன்னுடைய உதவிகளின் காட்சிகளையும் அவர்களுக்கு காட்டுகின்றான். கனவுகளின் மூலமாக முன்பே உறுதிப்படுத்தி விடுகின்றான்.

செனிகாலில் தாம்பாகோண்டா மண்டலத்தில் முஅல்லிம் ஸாஹிப் தப்லீஃக் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். அவர் கூறுகின்றார்: முஅல்லிம்கள் தப்லீஃக் செய்ய ஆரம்பித்தனர். ஜமாஅத்தை அறிமுகம் செய்து வைத்தனர். அப்போது முஹம்மது ஸியாரவ் ஸாஹிப் என்ற நண்பர் ஒருவர் நீங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களா? என்று கேட்டார். ஆம் என்று முஅல்லிம் ஸாஹிப் பதில் கூறினார். அதற்கு ஸியாரவ் ஸாஹிப் அவர்கள் கடந்த நாட்களில் தாம் ஒரு கனவு கண்டதாகவும் அதில், ஒரு நபர் தமது கனவில் வந்து இஸ்லாத்திலுள்ள அனைத்து பிரிவுகளிலும் அஹ்மதிய்யா பிரிவுதான் உண்மையானதும்; சரியானதும் ஆகும்; உண்மையான இஸ்லாமும் ஆகும். அதில் நீங்கள் சேர்ந்து கொள்ளுங்கள் என்று கூறியதாகவும் அவர் தெரிவித்தார். அடுத்த நாளே நீங்கள் வந்துவிட்டீர்கள். எவ்வாறு இருப்பினும் இதில் நிச்சயமாக கொஞ்சமாவது உண்மை இருக்கும் என்றும் அவர் கூறினார்.

அவருக்கு முஅல்லிம் ஸாஹிப் மொபைலில் கலீஃபாக்களின் நிழற்படத்தைக் காட்டிக் கொண்டு வந்தார். என்னுடைய நிழற்படம் காட்டப்பட்டபோது இந்த நபர் தான் எனது கனவில் வந்தார்; தான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபா என்றும் அவர் தெரிவித்தார் என்றும் அவர் கூறினார். இந்த சம்பவங்களைக் கூறும்போது அவரது கண்கள் ஈரமாகி விட்டன. அவர் அங்கேயே தமது குடும்பத்தினருடன் மிகவும் உணர்ச்சிப்பூர்வமாக அஹ்மதிய்யத்தில் இணைவதாக அறிவித்து விட்டார்.

தற்போது அவர் தப்லீஃக்கும் செய்து வருகின்றார்.

கனவின் மூலமாக அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்ட மற்றொரு சம்பவத்தைப் பாருங்கள்! கான்கோகின்ஷாஸா என்பது முற்றிலும் வேறொரு நாடாகும். நூற்றுக்கணக்கான மைல் தொலைவுகளுக்கு அப்பால் உள்ள இடமாகும். அங்குள்ள ஜமாஅத்தின் தலைவராக ஆஃஸம் மூனீர் ஸாஹிப் என்பவர் இருக்கின்றார். இவர் கிறிஸ்தவத்தில் இருந்து அஹ்மதியாகியிருந்தார். அவர் கூறுகின்றார்:

ஜமாஅத்தின் முபல்லிஃக்மார்கள் இங்கு தப்லீஃக் செய்வதற்காக வந்தபோது, ஜமாஅத்தை தீவிரவாத மார்க்கமாக கருதிக் கொண்டிருந்தேன்.

அதாவது முஸ்லிம் அல்லாதவர்கள் இஸ்லாத்தைக் குறித்து இவ்வாறு தான் பிரச்சாரம் செய்கின்றார்கள்.

அவர் கூறுகின்றார்: ஆனால், அஹ்மதி முபல்லிக் எந்த இஸ்லாத்தைக் குறித்து பேசினாரோ அது எனக்கு விநோதமானதாக இருந்தது. ஏனெனில் ஏற்கனவே நான் கிறிஸ்தவத்தில் இருந்து விரக்தி அடைந்திருந்தேன். இந்த அனைத்தையும் கண்டு எனக்கு கவலை ஏற்பட்டது. எனவே நான் துஆ செய்ய ஆரம்பித்தேன். அந்தக் காலத்தில் நான் ஒரு கனவு கண்டேன். அதில் ஒரு பெரியவர் என்னிடம் வந்து, அவர்களை நீங்கள் விட்டு விடுங்கள்; இந்தப் பக்கம் வாருங்கள் என்று கூறினார். இந்தக் கனவிற்கு அல்லாஹ் எனக்கு என்ன விளக்கத்தைப் புரிய வைத்தான் என்றால், கிறிஸ்தவத்தை விட்டு விட்டு அஹ்மதிய்யத்தின் பக்கம் வந்து விடு என்பதாகும். எனவே நான் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைந்து விட்டேன்.

ஆஃப்ரிக்காவில் தான் எனும் நாட்டில் நிகழ்ந்த சம்பவம் ஆகும். அப்துல்லாஹ் மூஸா என்ற ஒருவர் அரபுக் கோத்திரத்தைச் சேர்ந்தவர் ஆவார். அங்குள்ள முபல்லிஃக் இன்சார்ஜ் ஸாஹிப் கூறுகின்றார்: சில மாதங்களுக்கு முன் நமது முஅல்லிம் ஸாஹிப் அவரை சந்திப்பதற்காக சென்றார். மனிதம் முதலில் அமைப்பின் வேலை தொடர்பாக அந்தப் பகுதிக்கு முஅல்லிம் ஸாஹிப் சென்றிருந்தார். முஅல்லிம் ஸாஹிப் அவர்கள் இரண்டாவது முறையாக அந்தப் பகுதிக்கு சென்றிருந்தபோது, இஸ்லாமீ உசூல் கி ஃபிலாஸஃபி என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூலின் அரபி மொழியாக்கத்தை அவருக்குக் கொடுத்தார். சில வாரங்களுக்குப் பிறகு அப்துல்லாஹ் ஸாஹிப் சாடுடைய தலைநகரத்திற்கு வந்தபோது, முஅல்லிம் ஸாஹிபை தொடர்பு கொண்டு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணத்தைக் குறித்து கேள்விகள் கேட்க ஆரம்பித்தார். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் இருப்பது குறித்து ஆலிம்களிடம் நான் எவ்வளவோ சான்றுகளைக் கேட்டுப் பார்த்தேன். ஆனால், எனக்கு திருப்திகரமான பதிலை எவரும் கொடுக்கவில்லை என்றார். இரவில் முஅல்லிம் ஸாஹிப் அவர்களுடன் தங்கினார். இரவு முழுவதும் அஹ்மதிய்யா ஜமாஅத்தைக் குறித்தும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களைக் குறித்தும் கேள்விக் கேட்டுக் கொண்டே இருந்தார். அல்லாஹ் எனக்கு வழிகாட்ட வேண்டும்

என்று நான் அல்லாஹ்விடம் துஆ செய்யப் போகின்றேன் என்றார். காலையில் ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு, சிறிது நேரம் உறங்கினார். திடீரென கண் விழித்து முஅல்லிம் ஸாஹிபிடம் வந்து அவர் இவ்வாறு கூறினார்: நான் உறங்கிய பிறகு ஒரு கனவுக் கண்டேன். அதில் என்ற குரலைக் கேட்டேன். அதாவது எனக்குப் பிறகு அஹ்மது என்ற பெயரையுடைய ஒரு தூதர் தோன்றுவார் என்ற குரலைக் கேட்டேன் என்றார். முஅல்லிம் ஸாஹிப் அவர்கள் இந்த வசனத்தைக் குறித்து இவ்வாறு கூறினார்: இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஸ்தாபகரின் உண்மைக்கு சான்றாக விளங்குகின்றது. இந்த வசனத்திற்கு இந்த பொருளும் இருக்கின்றது என்று முஅல்லிம் ஸாஹிப் கூறியபோது, இறைவன் எனக்கு வழிகாட்டி விட்டான் என்று அப்துல்லாஹ் ஸாஹிப் கூறினார்கள். அவர் ஏற்கனவே அரபி அறிந்திருந்தார். எவ்வாறு இருப்பினும், இந்த வசனத்திற்கு இந்தப் பொருளும் உள்ளது என்று கூறப்பட்டபோது அவர் அஹ்மதியாகிவிட்டார்.

மார்ஷல் அயர்லார்ந்து என்பது அமெரிக்கப் பகுதியில் உள்ள ஒரு தீவு ஆகும் அங்குள்ள முபல்லிஃக் எழுதுகின்றார்: ஹர்முல் அஜர் ஸாஹிப் என்பவர் கல்லூரியில் பேராசிரியராக இருக்கின்றார்கள். அவரை தொடர்பு கொண்டு திருக்குர்ஆனுடைய ஒரு வசனத்திற்கு மார்ஷீ மொழியில் மொழியாக்கம் செய்து தருமாறு கேட்டுக் கொண்டேன். மொழியாக்கத்திற்காக நான் அவரிடம் சென்றபோது, இது திருக்குர்ஆனின் வசனம் என்று அறிந்தபோது அவர் பயந்து விட்டார். இஸ்லாம் அவருக்கு முற்றிலும் ஒரு புதிய ஒன்றாக இருந்தது. எந்தவொரு மார்க்க விஷயத்தையும் மொழியாக்கம் செய்வதில் தனக்கு அச்சம் இருப்பதாகவும், குறிப்பாக பைபுள் மற்றும் திருக்குர்ஆனிற்கு இடையில் கடுமையான வேறுபாடுகள் இருப்பதாகவும் அவர் கூறினார். எவ்வாறு இருப்பினும் அவர் மொழியாக்கம் செய்து கொடுத்தார். சில மாதங்களுக்கு பிறகு நான் அவரை சந்தித்து மார்ஷீ மொழியைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தேன். அவர் மார்ஷீ மொழியைக் கற்றுக் கொடுப்பதற்காக பள்ளிவாசலுக்கு வந்து சென்றார். அந்த காலகட்டத்தில் பல முறை இஸ்லாத்தைக் குறித்து பேசி வந்தோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய போதனைகளையும் நான் அவருக்கு அறிமுகம் செய்து வைத்தேன். இதனால் இஸ்லாத்தின் போதனைகளை அவர் நன்கு அறிந்து கொண்டு விட்டார். அதிக காலம் ஒன்றும் கழிந்திருக்கவில்லை.

அந்தக் காலகட்டத்தில் நான் அங்குள்ள முபல்லிஃக் அவர்களிடம் ஹமாரி தஃலீம் என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூலை மார்ஷீ மொழியில் மொழியாக்கம் செய்யுமாறு கூறியிருந்தேன். ஏனெனில், புதிதாக வருகின்ற அஹ்மதிகளின் தர்பிய்யத்திற்கு இது மிகவும் அவசியமான நூலாக இருக்கின்றது.

முபல்லிஃக் கூறுகின்றார்: பிறகு நான் இது தொடர்பாக ஹர்முல் அஜர் ஸாஹிபை சந்தித்து பேசினேன். அவர் தான் உதவி செய்வதற்கு சம்மதம் தெரிவித்து விட்டார். இப்போது, இஸ்லாத்தைக் குறித்த அவரது கண்ணோட்டம் முற்றிலும் மாறியிருந்தது. தற்போது தமது வேலையிலுள்ள பிரச்சனைகளைக் குறித்து எடுத்துக் கூறினார். நான் அவரிடம் துஆ செய்யுங்கள்; ஆனால், ஈஸா (அலை) அவர்களின் பெயரைக் கூறி துஆ செய்ய வேண்டாம். அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள் என்று கூறினேன். எனவே அவர் துஆ செய்ய ஆரம்பித்தார். சில வாரங்கள் கழிந்த பிறகு, மினிஸ்டர் ஆஃப் கல்சர் ஒரு புதிய துறையைத் திறந்து அதில் அவருக்கு வேலை கொடுத்து விட்டார். அவர் விண்ணப்பித்தபோது அவருக்கு உடனடியாக அந்த வேலை கிடைத்து விட்டது.

அவர் கூறினார்: தற்போது நான் துஆ செய்யும்போது, ஈஸா (அலை) அவர்களின் பெயரைக் கூறுவதை விட்டு விட்டேன். அதற்கு பகரமாக இறைவனின் பெயரையே கூறுகின்றேன். சில காலங்களுக்கு பிறகு வேலைக்கான ஒப்புதல் கடிதமும் அவருக்கு கிடைத்து விட்டது.
துஆ ஒப்புக் கொள்ளப்பட்ட இந்த அடையாளத்தைக் கண்ட பிறகு, அதேபோன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் சொற்களை படித்த பிறகு அஜர் ஸாஹிப் அவர்கள் பைஅத் செய்து விட்டார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூலான ஹமாரி தஃலீம் என்ற நூலை மார்ஷீ மொழியில் மொழியாக்கம் செய்ய ஆரம்பித்து விட்டார். தற்போது அந்தப் பணி முழுமையடையப் போகின்றது.

மக்களுடைய உள்ளங்களை அல்லாஹ் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பக்கம் எவ்வாறு திருப்புகின்றான் என்பதைப் பாருங்கள்! கிறிஸ்தவம் தமது கொடியை உலகில் நிலைநாட்டக் கூடிய பேச்சுகளை பேசி வருகின்றது. அந்தப் பேச்சுகள் எங்கே இருக்கின்றன! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் கிறிஸ்தவர்கள் வந்து கொண்டிருக்கின்ற இந்தக் காலம் எங்கே உள்ளது!

இவை அனைத்தையும் கண்ட பிறகும் கூட பெயர் தாங்கிய மார்க்கங்களின் குத்தகைகாரர்களின் கண்கள் திறக்கவில்லையென்றால் அவர்களின் விவகாரம் அல்லாஹ்வின் கையில் உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மூலமாக இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகின் மூலை முடுக்குகள் வரை கொண்டு சேர்க்கின்ற பணியை அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலமாக செய்ய வைக்கின்றான். இன்ஷா அல்லாஹ் இது பரவும்; மலரும்; காய்க்கும். இந்த இறைப் பணியை எவரும் தடுக்க முடியாது. ஆயினும், ஒவ்வோர் அஹ்மதியும் இதனை நினைவிற் கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வாதத்தை ஏற்றுக் கொள்வது மட்டும் போதுமானதன்று. மாறாக, அல்லாஹ்வால் அனுப்பப்பட்டுள்ள போதனையின் உண்மையான முன்மாதிரியாக திகழ்ந்தவாறு தங்களுக்குள் அந்த தூய மாற்றத்தையும் உருவாக்க வேண்டும். அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிமுறைப் படி செயல்படக் கூடிய செயல் வடிவம் ஆகும். இது நிகழ்ந்தால் தான் அல்லாஹ்வின் அருட்களுக்கும் நாம் வாரிசுகளாவோம். அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பேறை வழங்குவானாக.

பாலஸ்தீனியர்களுக்காகவும் துஆக்கள் செய்து வாருங்கள். அவர்கள் மீது செய்யப்படுகின்ற அநீதிகளிலிருந்து அவர்களுக்கு அல்லாஹ் இரட்சிப்பை வழங்குவானாக. வாழ்வாதாரத்திற்கு தேவையான பொருட்கள் அவர்களை சென்றடைவதற்காக சில நாட்களுக்கு போர் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதன் பிறகு என்ன நிகழும்? உதவி கிடைத்த பிறகு மீண்டும் அவர்களை கொல்வார்கள். இஸ்ரேலிய அரசாங்கத்தின் நோக்கம் அபாயகரமானதாக தெரிகின்றது. ஏனெனில், அந்த அரசாங்கத்தின் சிறப்பு ஆலோசகர் ஒருவர் நேற்றோ அல்லது முந்தைய நாளோ அறிவிக்கும்போது இந்தப் போர் நிறுத்தத்திற்கு பிறகு உடனடியாக போரை ஆரம்பிக்கவில்லையென்றால் நான் இந்த அரசை விட்டு வெளியேறி விடுவேன் என்று கூறியிருக்கின்றார். அவர்களின் சிந்தனைகள் இவ்வாறானதாக இருக்கின்றன. வல்லரசுகள் அனுதாபங்களைப் பற்றி வெளிப்படையில் பேசுகின்றனதான். ஆனால், அவர்கள் நீதியை நிலைநாட்ட விரும்பவில்லை. இந்த விவகாரத்தில் நிதானத்தை கடைபிடிக்க விரும்பவில்லை. இந்தப் போர் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் மட்டுமே இருக்கும் என்று அவர்கள் கருதுகின்றனர். ஆனால் அவர்களுக்கு இது குறித்த அறிவு இல்லை. ஆனால் எவர்கள் இது குறித்து அறிவு பெற்றிருக்கின்றனரோ அவர்கள் பேச ஆரம்பித்து விட்டனர். இந்தப் போர் அந்தப் பகுதிகளுக்கு மட்டுமே உட்பட்ட போராக இருக்காது. மாறாக, வெளியேயும் பரவும். மேலும் அவர்களுடைய நாடுகள் வரை வந்தடைந்து விடும் என்று அவர்கள் பேசுகின்றனர். முஸ்லிம் அரசாங்கங்கள் சிறிது பேச ஆரம்பத்துவிட்டன. உதாரணமாக சவுதி அரசரும் பேசும்போது முஸ்லிம்களின் குரல்கள் ஒரே குரலாக இருக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். ஒரே குரலாக ஆக வேண்டும் என்றால் அதற்கான உறுதியான முயற்சியும் செய்ய வேண்டும். அவர்களுக்கு இது குறித்த உணர்வு பிறந்து விட்டதென்றால் பின்னர் அதனை செயல்படுத்துவதற்குரிய நற்பேறையும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக. எவ்வாறு இருப்பினும், துஆக்களின் பக்கம் அதிக கவனம் செலுத்துங்கள். தொழுகைக்குப் பிறகு சில ஜனாஸா தொழுகைகளை நான் தொழ வைப்பேன்.

முதலாவது நற்குறிப்பு ஜமாஅத்தினுடைய முரப்பி அப்துஸ் ஸலாம் ஆரிஃப் ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் 54-வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளினால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். அன்னாரின் குடும்பத்தில் அன்னாருடைய தாய் வழி கொள்ளுத் தாத்தா மதிப்பிற்குரிய ஹாஜி ஹஸன் கான் ஸாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் 1937-ல் இரண்டாவது கிலாஃபத்தில் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டார்கள். மர்ஹூம் அவர்களின் மனைவி முன்னர் மரணமடைந்து விட்டார்கள். அல்லாஹ் அன்னாருக்கு இரு மகன்களை வழங்கியுள்ளான். இருவரும் திருக்குர்ஆனை மனனம் செய்தவர்கள் ஆவர். ஒருவர் ஜமாஅத்தின் முரப்பியாக இருக்கின்றார். மற்றொருவர் அநேகமாக வாழ்வை அர்ப்பணித்தவர் என்று நான் கருதுகின்றேன்.

மர்ஹூம் அவர்களின் மகன் ஹாஃபிழ் அப்துல் முனீம் ஸாஹிப் ஜமாஅத்தின் முரப்பியாக இருக்கின்றார். அவர் கூறுகின்றார்:

எங்களது தந்தை மிகவும் நேசத்திற்குரியவராக இருந்தார். அன்புடன்

தர்பிய்யத் வழங்குபவராக இருந்தார். தம்முடைய சந்ததிகளை மட்டுமின்றி தமது உடன் பிறந்தவர்களையும் அன்னார் நேசித்தார்கள். எந்த அளவிற்கு என்றால், உடன் பிறந்தவர்களுடன் கருணையுடன் நடந்து கொண்டார்கள். அதிக அன்பின் தொடர்பு இருந்தது. இதேபோன்று மக்களுடனும் அதிக அன்பின் தொடர்பு இருந்தது. இதன் காரணமாகவே அன்னாரின் மரணத்தின்போது ஜனாஸாவில் அதிக மக்கள் கலந்து கொண்டனர். மர்ஹூமுடன் தங்களுக்கு இருந்த தொடர்புகளைக் குறித்து கூறினர்.

மர்ஹூமின் மகன் கூறுகின்றார்:

எங்களுடைய உள்ளத்தில் அல்லாஹ்வின் தூதர் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மீதான நேசத்தையும், கிலாஃபத்தின் மீதான நேசத்தையும் அன்னார் எந்த அளவிற்கு உறுதிப்படுத்தி விட்டார்கள் என்றால் இனி அது எங்களது உள்ளத்தில் இருந்து வெளியேறவே முடியாது. இவ்விஷயத்தை நீங்கள் உங்கள் சந்ததிகளிடத்திலும் வலியுறுத்தி வாருங்கள் என்று அன்னார் எங்களுக்கு கூறிவந்தார்கள்.

இந்த இரண்டு சகோதரர்களும் வாழ்வை அர்ப்பணித்தவர்கள் ஆவர்.

மர்ஹூமின் மகன் கூறுகின்றார்: தாயார் மரணமடைந்தபோது, பொறுமையை கைகொள்ளுமாறு எங்களிடம் கூறினார்கள். அவர்களும் மிகுந்த பொறுமையை மேற்கொண்டார்கள்.

ராஜா முபாரக் ஸாஹிப் என்ற ஜமாஅத்தின் முரப்பி ஸாஹிப் ஒருவர் மர்ஹூமின் நண்பர் ஆவார். அவர் கூறுகின்றார்: நான் மர்ஹூமுடைய வகுப்புத் தோழராக இருந்தேன். ஜாமிஆவிலும், செயல்களத்திலும் நான் அன்னாருடன் அதிக நேரம் இருந்துள்ளேன். மர்ஹூம் வானவருடைய பண்பைக் கொண்டவராக இருந்தார். இறை வணக்கத்திலும் மிக உயரிய அந்தஸ்தை பெற்றவராக இருந்தார். மிக உயரிய இடத்தை அடைந்த இறை அடியாராக மர்ஹூம் திகழ்ந்தார். நான் அவரிடம் பல விஷயங்களைக் கற்றுக் கொண்டுள்ளேன். மிக கண்ணியமான சொற்களையே பயன்படுத்துவார். ஆதாரங்களின் அடிப்படையிலேயே பேசுவார். எப்போதும் எவருடனும் சண்டையிட மாட்டார். மக்கள் அவருடன் சண்டையிடுவார்கள். அவர் மீது அநீதி இழைப்பார்கள். ஆனால், அவர் எப்போதும் மிக பொறுமையுடன் தான் பேசுவார். எவரையும் இழிவுபடுத்துவதற்கு முயற்சி செய்ய மாட்டார். ஒவ்வொருவரையும் முழுமையாக கவனத்தில் கொள்வார். இது தான் ஓர் உண்மையான முரப்பியினுடைய சிறப்பம்சமாகும்.

அவர் கூறுகின்றார்: மர்ஹூம் எங்கெல்லாம் இருந்தார்களோ அங்கு நூற்றுக்கணக்கான மக்களின் உள்ளத்தில் கிலாஃபத்தின் மீதான நேசத்தை நிரப்பி விட்டார். எந்த அளவிற்கு ஆழமாக சென்று தர்பிய்யத் வழங்குவார் என்றால் அவரின் மரணத்தின்போது அவர் எங்கெல்லாம் இருந்தாரோ அங்கிருந்தெல்லாம் மக்கள் வந்தனர். மர்ஹூமைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துக் கூறி ஜமாஅத் தற்போது அனாதையாகி விட்டது என்று அழுது கொண்டிருந்தார்கள். மர்ஹூம் கால்நடையாகவே பயணம் செய்வார்கள். பல மைல்கள் வரை கால்நடையாகவே செல்வார்கள். ஐந்து பத்து கி.மீ வரை கால்நடையாகவே செல்வார்கள். ஜமாஅத் உங்களுக்கு வசதிகளை கொடுத்திருக்கின்றதே! நீங்கள் ரிக்ஷாவில் செல்லலாமே! என்று யாராவது கூறினால் நான் ஜமாஅத்தின் பணத்தை சேமிக்கின்றேன்; உங்களுக்கு என்ன கஷ்டம்? என்று கூறுவார். நடைபயணமாகவே சுற்றுப் பயணம் செல்வார். பல மைல்கள் வரை நடந்தே செல்வார்.

அல்லாஹ் அன்னாரின் அந்தஸ்தை உயர்த்துவானாக. இவ்வாறான நன்றியுணர்வுள்ள, உழைப்பாளிகளான முரப்பிமார்களை அல்லாஹ் ஜமாஅத்திற்கு எப்போதும் வழங்கி வருவானாக. அன்னாருடைய சந்ததிகளுக்கும் அன்னாருடைய நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக.

இரண்டாவது நற்குறிப்பு முஹம்மது தாஸிம் கான் ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் தற்போது கனடாவில் வசித்து வந்தார்கள். முன்னாள் நாயிப் நாஸிர் பைத்துல் மால் கர்ச் ஆக இருந்துள்ளார்கள். 83-வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூம் நஸ்ர் அஹ்மத் கான் ஸாஹிப் அவர்களின் மகனும், காஸி முஹம்மது நஸீர் டைர்பூரி அவர்களின் மருமகனும் ஆவார்கள்.

இவர்களுடைய மகன் முஹம்மது காலித் கான் ஸாஹிப் கூறுகின்றார்: கிலாஃபத்தின் நான்கு காலகட்டங்களை காணக் கூடிய நற்பேறை மர்ஹூம் பெற்றுள்ளார்கள். மூன்றாவது கிலாஃபத்தின் முழு காலகட்டத்திலும் பிரைவேட் செகரட்டரியின் அலுவலகத்தில் தொண்டாற்றக் கூடிய நற்பேறை பெற்றுள்ளார்கள். ஐவேளை தொழுகைகள், திருக்குர்ஆன் திலாவத் போன்றவற்றை முறையாகவும், அதிகமாகவும் பேணி வந்தார்கள். சந்ததிகளுக்கும் இதனையே வலியுறுத்தி வந்தார்கள். எளிமை, நேர்மை ஆகியவற்றின் உயரிய முன்மாதிரியாக திகழ்ந்தார்கள். சந்ததிகளுக்கும் கிலாஃபத்துடன் தொடர்பு குறித்து வலியுறுத்தி வந்தார்கள். கிலாஃபத்திற்கு ஓர் உருவிய வாளைப் போன்று இருந்தார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாருடைய நற்செயல்களை அன்னாரின் சந்ததிகள் தொடர்வதற்கான நற்பேறையும் வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு நமது ஜமாஅத்தின் மிகவும் பிரசித்தி பெற்ற கவிஞர் அப்துல் கரீம் ஸாஹிப் குத்தூஸி அவர்களுடையதாகும். அன்னார் கடந்த நாட்களில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூம் குடும்பத்தில் அன்னாருடைய தந்தை மியான் அல்லாஹ் தத்தா ஸாஹிப் அவர்களின் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் 1934-ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் கரத்தில் பைஅத் செய்தார்கள். அஹ்மதியான பிறகு முழு வாழ்வையும் அர்ப்பணித்தார்கள். எப்போதும் தப்லீஃக் செய்து வந்தார்கள். பல குடும்பங்களை அஹ்மதிகளாக ஆக்கியிருக்கின்றார்கள். முழு வாழ்நாளும் அர்ப்பணிப்பின் ஆன்மாவுடன் ஜமாஅத்திற்கு அன்னார் தொண்டாற்றியுள்ளார்கள். அன்னாரின் மனைவி புஷ்ரா கரீம் ஸாஹிபா ஆவார்கள். இவர்களுடைய நிக்காஹ்வை ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் நடத்தி வைத்தார்கள். இவர்களுக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர். இவர்களுடைய அப்துல் கபீர் கமர் ஸாஹிப் அவர்கள் ஜமாஅத்தன் முரப்பியாக இருக்கின்றார். அவர் ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவில் தற்போது ஆசிரியராக இருக்கின்றார். மர்ஹூம் அவர்களும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றி இருக்கின்றார்கள். 30 வருடங்களாக லாஹூர் மாவட்டத்திலுள்ள ரிஜ்னா டவுண் ஜமாஅத்தில் செகரட்டரியாக தொண்டாற்றியுள்ளார்கள். மேலும் பல்வேறு துறைகளிலும் தொண்டாற்றியுள்ளார்கள். இவர்களுடைய கவிதைகள் சிறப்பானதாக இருந்தன. கவிதைகள் எழுதி வந்தார்கள். பல கவிதை தொகுப்புகளும் இருக்கின்றன. அவர்களுடைய கவிதைகள் (அச்சிலும்) வெளிவந்துள்ளன. இவர் செய்த சிறப்பான பணி என்னவென்றால், يَا عَيْنَ فَيْضِ اللّٰهِ وَالْعِرْفَانِ என்று ஆரம்பமாகும் கஸீதாவை உருது மற்றும் பஞ்சாபி மொழியில் மொழிபெயர்த்துள்ளார்கள். இது மட்டுமின்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கவிதைத் தொகுப்பான துர்ரே ஸமீனுடைய 313 கவிதைகளை பஞ்சாபி மொழியில் மொழியாக்கம் செய்துள்ளார்கள். மர்ஹூம் ஒரு காலத்தில் இன்னும் சுதந்திரமாக செயல்பட வேண்டும் என்ற ஒரு பித்துப் பிடித்த நிலையில் இருந்தார்கள். இது குறித்து அன்னாரே எழுதுகின்றார்கள்: 1968-ல் தம்முடைய கிராமத்திலிருந்து பணி நிமித்தமாக லாஹூருக்கு சென்றேன். இங்கு வந்த பிறகு மதசார்பற்ற சிந்தனைகள் வளர்வதற்கு வாய்ப்புகள் கிடைத்து வந்தன.

சிலநேரம் தொழுவார்கள். சில நேரம் பள்ளிவாஸலுக்கு செல்வார்கள். சில நேரம் பள்ளி வாசலுக்கு செல்ல மாட்டார்கள். ஏனெனில் பள்ளிவாசல் தொலைவில் இருந்தது. சில நேரம் ஜுமுஆ தொழுவார்கள். சிலநேரம் வேறு எங்காவது தொழுவார்கள். சிலநேரம் ஜுமுஆ தொழ மாட்டார்கள்.

அவர் கூறுகின்றார்: ஜுமுஆவினுடைய நாளில் ஒருமுறை நண்பருடைய வீட்டிற்கு விருந்து உண்ண சென்றேன். அருகில் அஹ்மதி அல்லாதவர்களின் பள்ளிவாசல் இருந்தது. அங்கு ஜுமுஆ தொழுவதற்காக சென்று விட்டேன். அந்த மவ்லவியினுடைய நிலையை மர்ஹூம் அவர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். அந்த நிலைதான் இன்றும் காணப்படுகின்றது. மர்ஹூம் கூறுகின்றார்கள்: அந்த மவ்லவி ஸீஷான் என்ற பழச்சாறுக்கு எதிராக பாதி குத்பாவைக் கொடுத்தார்.

ஸீஷான் என்பது அஹ்மதிகள் சார்பாக தயாரிக்கப்படும் ஒரு பானமாகும். அது அஹ்மதிகளின் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றது. அந்தப் பானத்தில் ரப்வாவின் மண்ணையும் அஹ்மதிகள் கலக்கின்றார்கள். எனவே அதனை அருந்தக் கூடாது என்று அந்த மவ்லவி கூறினார். மர்ஹூம் கூறுகின்றார்: நான் அவருடைய குத்பாவைக் கேட்டேன்தான். எனினும், அங்கு தொழாமல் நான் வெளியே வந்து விட்டேன். என்ன ஆயிற்று? என்று நண்பர் கேட்டார். அப்பொழுது, உங்களுடைய இந்த மவ்லவியுடைய வீணான பேச்சைக் கேட்க முடியாது என்று நான் கூறினேன். அதற்கு இவருடைய பேச்சை விட்டு விடுங்கள்; இவர் இவ்வாறுதான் பேசிக் கொண்டிருப்பார் என்று எனது நண்பர் கூறினார்.

உணவு உண்ட பிறகு வெளியே வந்தபோது, அங்கு ஒரு கடையில் நின்று கொண்டு அந்த மவ்லவி ஸீஷான் என்ற அந்த பழச்சாறை குடித்துக் கொண்டிருந்தார். என்னால் அதனை பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனவே நீங்கள் தான்

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 04-18 January 2024 Issue No.1 - 3

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

தற்போது இந்த பானத்திற்கு எதிராக என்னென்னவோ பேசினீர்கள்; தற்போது நீங்களே இதனை குடிக்கின்றீர்களே? என்று நான் அவரிடம் கேட்டேன். அதற்கு அந்த மவ்லவி கூறினார்: பாக்கெட்டுகளில் அடைத்த பானங்களை குடிக்கக் கூடாது; அப்படி குடிக்க வேண்டும் என்றால் ஸீஷான் பானத்தை அருந்திக் கொள்ளுங்கள்; அது கலப்படமற்றது என்று மருத்துவர் என்னிடம் கூறியிருந்தார். எனவே நான் மருந்தாக நினைத்து இதனைக் குடிக்கின்றேன் என்றார்.

ரப்வாவின் மண் அதில் கலக்கப்படுகின்றது என்று நீங்கள் கூறினீர்களே? அது என்ன விஷயம் என்று நான் கேட்டபோது, அதற்கு அவர் சிரித்தவாறு இவ்வாறு மெருகூட்டி கூறவில்லையென்றால் எங்களது மார்க்க வியாபாரம் எவ்வாறு எடுபடும் என்றார். லாப நோக்கத்திற்காக அஹ்மதிகளாகிய நாம் மார்க்கத்தை பயன்படுத்துகின்றோம் என்று நம் மீது அவதூறு சுமத்தப்படுகின்றது. நம் மீது அவதூறு சுமத்தி விட்டு அவர்கள் தங்களுடைய லாபத்திற்காக செயல்படுகின்றனர். எவ்வாறு இருப்பினும் அன்னாருடைய இதுபோன்ற பல சம்பவங்கள் இருக்கின்றன. கிலாஃபத்துடன் எல்லையற்ற தொடர்பு இருந்தது. தமது பிள்ளைகளிடத்திலும் அந்த தொடர்பை கடத்திச் செல்வதற்காக அவர்கள் முயற்சி செய்திருக்கின்றார்கள்.

நான் ஏற்கனவே கூறியது போன்று அன்னார் ஜமாஅத்தின் பிரசித்தி பெற்ற கவிஞராக இருந்தார்கள். அதனை அன்னார் தமது பெருமிதமாக கருதி வந்தார்கள். ஜமாஅத்தின் கவிதை அரங்குகளில் தமது கவிதைகளை வாசித்து காட்டி வந்தார்கள். மேலும் ஜமாஅத்தைக் குறித்து எண்ணற்ற கவிதைகளை எழுதக் கூடிய நற்பேறும் அன்னாருக்கு கிடைத்துள்ளது.

அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

* * * * *

## தஃப்ஸீரே கபீர்... (1ம் பக்க தொடர்ச்சி)

நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, இந்த வசனத்திற்கான பொருளை மறுமையுடன் மட்டுமே பொருத்திப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, கடுமையான போர்கள் அல்லது நிலநடுக்கங்களிலும் இந்த நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

1905-ல் காங்கடா மாவட்டத்தில் நிலநடுக்கம் வந்தபோது அதனால் சுமார் 30 ஆயிரம் நபர்கள் மாண்டுபோயினர். முழு கிராமமும் எப்படி அழிந்து விட்டது? என்றால் அவற்றின் பெயரும், அடையாளமும் கூட எஞ்சியிருக்கவில்லை. பஞ்சாப் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலை வரை அதிர்ந்து விட்டது. ஆக அப்போதைய மக்களின் நிலையும் முற்றிலும் இவ்வாறே இருந்தது.இதேபோன்று 1935-ல் குவெட்டாவில் நிலநடுக்கம் வந்தபோதும், காயமுற்ற மற்றும் நிலநடுக்கத்திலிருந்து தப்பித்த மக்கள் பித்துப் பிடித்தவர்களைப் போன்று ஸ்டேஷன்களிலும், இங்கும் அங்கும் தமது உறவினர்களைத் தேடியவாறு ஓடித் திரிந்தார்கள். தமது எந்த உறவினரும் அவர்களுக்கு தென்படாதபோது அவர்கள் கூக்குரலிட்டு ஒப்பாரி வைக்கத் துவங்கிவிட்டனர்.

ஒரு பத்திரிகையின் நிருபர் இவ்வாறு எழுதினார்: நான் ஒரு பெண்மணியைப் பார்த்தேன். ஒரு குடிகாரன் போதையில் மதிமயங்கி தட்டுத் தடுமாறி திரிவதைப் போன்று அவள் ஸ்டேஷனில் சுற்றித் திரிந்து கொண்டிருந்தாள். அவள் சில முறை வலது பக்கம் விழுந்தாள்; சிலமுறை இடது பக்கம் விழுந்தாள். மேலும், எல்லாருமே மரணித்து விட்டனர்; ஒருவர் கூட உயிர் பிழைக்கவில்லை என்று அழுது கொண்டே கூறிக் கொண்டிருந்தாள்.

சில மக்கள் இவ்வாறு கூறினர்: அதாவது, துன்பத்திற்குள்ளானவர்களிடம் கேட்கப்பட்டபோது அவர்கள் பதில் அளிப்பதற்கு பகரமாக கதறி அழுதனர். பின்னர் இந்த துயரத்தின் காரணமாக பல நபர்களுக்கு பைத்தியம் பிடித்து விட்டது. அந்த செய்தித்தாள்களில் இவ்வாறு செய்தி அச்சாகியிருந்தது: அதாவது, குவெட்டாவிலிருந்து முல்தானிற்கு வண்டி வந்து கொண்டிருந்தது. அப்போது வழியில் இரண்டு பெண்கள் கடுமையான துன்பத்தின் காரணமாக பைத்தியம் ஆகிவிட்டனர். மேலும் ஒரு நபரும் பைத்தியம் ஆகிவிட்டார். அவர் வண்டியிலிருந்து குதித்து விட்டார். சுருக்கமாக, இது எத்தகைய துன்பம் மிகுந்த ஒரு சம்பவம் என்றால், அந்தக் காட்சியை பார்க்கக் கூடியவர்கள் ஒரு பக்கம் இருக்கட்டும்; அதனை படிக்கக் கூடியவர்களும் கூட அச்சத்தில் உறைந்து விட்டார்கள். மேலும், அவர்களின் உள்ளம் வேதனை மற்றும் துன்பத்தால் நிறைந்து விட்டது.

1934-ம் ஆண்டு ஜனவரி 15-ம் நாளன்று பீகாரில் கியாமத்தைப் போன்ற ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டது. அது தொடர்பாக இந்தியாவின் முன்னாள் வைஸ்ராயி லார்ட் ரேடிங் லண்டனில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தியவாறு கண்கலங்கிவிட்டார். மேலும், கூறினார்: இந்த நிலநடுக்கம் எவ்வளவு பயங்கரமானதாக இருந்தது என்றால் இந்தியாவின் வரலாற்றில் இதற்கு உதாரணம் கிடைப்பதில்லை. (ஸிவில் பத்திரிகை, பிப்ரவரி 10, 1934)

ஆக, அப்போதும் மக்களின் நிலை இவ்வாறே இருந்தது. (தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 5, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * *

## மல்ஃபூஸாத்... (1ம் பக்க தொடர்ச்சி)

புதிய வாழ்வை பெற முடியாது.

எனவே நீங்களோ என்னுடன் தொடர்பு வைத்துள்ளீர்கள். இறைவனுக்காக வாழ்வை அர்ப்பணிப்பதை நான் எனது வாழ்வின் அசல் நோக்கமாக கருதுகின்றேன்; மேலும் இறைவனுக்காக வாழ்வை அர்ப்பணிப்பதை நான் விருப்பத்திற்குரியதாக கொண்டுள்ளேன் என்பதை நீங்கள் காண்கின்றீர்கள். பின்னர் எனது இந்த செயலை தமக்காக விரும்பக் கூடிய நபர்கள் உங்களில் எத்தனை பேர் இருக்கின்றனர்? என்று நீங்கள் உங்களுக்குள் பாருங்கள்!

மனிதன் அல்லாஹ்விற்காக வாழ்வை அர்ப்பணிக்கவில்லையென்றால் பின்னர் அவன் நினைவிற் கொள்ளட்டும்! அதுபோன்ற மக்களுக்காக அல்லாஹ் நரகத்தை படைத்திருக்கின்றான். ஒவ்வொரு மனிதனும் நரகத்திற்கு கண்டிப்பாக செல்வார் என்று சில பாழ்பட்ட சிந்தனை கொண்ட மற்றும் புரிதல் குறைந்த மக்கள் கருதுகின்றனர். அது தவறாகும் என்பது இந்த வசனத்திலிருந்து தெளிவாக தெரிய வருகின்றது. ஆயினும், நரகத்தின் தண்டனையிலிருந்து முற்றிலும் பாதுகாப்பாக இருப்பவர்கள் குறைவானவர்களே என்பதில் சந்தேகமில்லை. மேலும், இது விநோதமான விஷயம் இல்லை.

என் அடியார்களுள் மிகச் சிலரே நன்றியுள்ளவர்களாக விளங்குகின்றனர்(34: 14) என்று அல்லாஹ் கூறுகின்றான்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 501, காதியான் பதிப்பு, 2018-ம் ஆண்டு)

**National Watch Company**

**Sales & Service**



**B. Mohamed Adil**

93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT 99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad